## அல்லாஹ்வின் கட்டளை

لِلَّذِيْنَ اتَّقَوْا عِنْدَ رَبِّهِمْ جَنّٰتٌ تَجْرِيْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا وَاَزْوَاجٌ مُّطَهَّرَةٌ وَّرِضْوَانٌ مِّنَ اللّٰهِ

இறையச்சம் உடையவர்களுக்கு அவர்களின் இறைவனிடத்தில் தோட்டங்கள் உள்ளன. அவற்றின் கீழே ஆறுகள் ஓடுகின்றன. (அவர்கள்) அவற்றில் என்றென்றும் வாழ்வர். (அவர்களுக்கு) கற்புள்ள வாழ்க்கைத் துணைகளும், அல்லாஹ்வின் திருப்தியும் உண்டு. (3:16)


بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 3

ஆசிரியர் முஸ்லிம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

10 ஜமாதியுல் அவ்வல் 1440 ஹிஜ்ரி கமரி 17 சுலஹ் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

17 ஜனவரி 2019


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**உலகத்தோடும் அதன் அலங்காரத்தோடும் கவர்ச்சி அடைந்து விடாதீர்கள். உயர் குலத்தின் பெயரால் பெருமைப்படாதீர்கள். எப்பெண்ணையும் ஏளனம் செய்யவோ நகைக்கவோ செய்யாதீர்கள். கணவன்மார்களின் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்காக அவர்களை வற்புறுத்தாதீர்கள். நீங்கள் நிரபராதிகளாகவும் பரிசுத்தவான்களாகவும் மண்ணறைகளில் நுழைவதற்கு முயற்சி செய்யுங்கள்**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...

மவ்லவிகளை நினைக்கும் போது அவர்கள் மீது பரிதாபமே ஏற்படுகின்றது. அவர்களிடையே நேர்மை காணப்படுமானால் தக்வா என்னும் இறையச்சத்திற்குரிய வழியைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒவ்வொரு விதத்திலும் தங்களை திருப்திப் படுத்தியிருப்பார்கள். இறைவன் நல்ல ஆன்மாக்களை திருப்திப்படுத்தியுள்ளான். ஆனால் அபூஜஹிலின் மண்ணால் படைக்கப்பட்ட மக்கள் அபூஜஹிலால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அவ்வழியையே மேற்கொள்கிறார்கள். மீரட்டிலிருந்து ஒரு மவ்லவி சாஹிப் பதிவுத் தபால் மூலமாக அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் அமர்தசரஸில் நத்வத்துல் உலமா என்னும் ஆலிம்களின் மாநாடு நடைபெறுவதால் அங்கு வந்து வாக்குவாதம் செய்ய வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்.

அறிவீனர்களே! அவ்விரோதிகளுக்கு நல்லெண்ணம் இருக்குமென்றால் வெற்றி தோல்வியைக் பற்றிய எண்ணம் அவர்களுக்கு இல்லாமலிருந்தால் அவர்கள் தங்களைத் திருப்திப்படுத்துவதற்காக நத்வா போன்றவர்களின் தேவை எதற்கு? நாம் நத்வாவின் ஆலிம்களை அமிர்தசரஸின் ஆலிம்களிலிருந்து வேறுபட்டவர்களாக நினைக்கவில்லை. அவர்கள் ஒரே நம்பிக்கை ஒரே இனம் ஒரே அடிப்படையைக் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். காதியானுக்கு வருகை தருவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

ஆனால் வாக்குவாதத்திற்காக அல்லாமல் உண்மையை அறிய வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாத்திரமே வர வேண்டும். நாங்கள் ஆற்றும் உரைகளை அவர்கள் கேட்கட்டும். சந்தேகம் இருக்குமானால் பணிவு மரியாதை இவற்றின் வழிமுறைகள் மூலம் தங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளட்டும். அவர்கள் காதியானில் தங்கும் வரை அவர்கள் நமது விருந்தாளியாகவே கருதப்படுவார்கள். ஆகவே எங்களுக்கு நத்வா போன்றவர்களின் அவசியமுமில்லை. மேலும் அவர்களின் பக்கம் நாம் செல்ல வேண்டிய தேவையுமில்லை. இவர்கள் அனைவரும் உண்மைக்குப் பகைவர்களாவர். ஆயினும் உண்மை உலகில் பரவிக் கொண்டே செல்கின்றது. இறைவன் இன்றிலிருந்து இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பராஹீனே அஹ்மதிய்யாவில் தனது வெளிப்பாட்டின் மூலம் மக்கள் உம்மை தோல்வி அடையச் செய்ய பெரும் முயற்சி எடுத்துக் கொள்வார்கள். அதற்காக அவர்கள் முழு மூச்சுடன் செயல்படுவார்கள். என்றாலும், இறுதியில் நான் உம்மை பெரும் சமுதாயமாக உருவாக்குவேன் என்று வெளிப்படுத்தியுள்ளது இறைவனின் மாபெரும் அற்புதமில்லையா?

இது என்னோடு ஒரு மனிதனும் இல்லாத காலத்திலுள்ள இறைவெளிப்பாடாகும். பின்னர் எனது வாதம் வெளிவந்ததும் விரோதிகள் அதற்கு விரோதமாக முழு மூச்சுடன் முனைந்து செயல்பட்டனர். இறுதியில் மேலே குறிப்பிட்ட முன்னறிவிப்பின்படி இந்த இயக்கம் பரவி விட்டது. மேலும் இன்று வரை அது பிரிட்டிஷ் இந்தியாவில் ஒரு லட்சத்தை விடச் சிறிது அதிகம் மக்களைக் கொண்டதாய்ப் பெருகி வளர்ந்துள்ளது.

நத்வத்துல் உலமாவிற்கு மரணத்தைப் பற்றிய ஞாபகம் இருக்குமேயானால் பராஹீனே அஹ்மதிய்யாவையும் அரசு பத்திரங்களையும் பார்த்து விட்டு இது அற்புதமா? இல்லையா? என்று கூறட்டும். மேலும் திருக்குர்ஆனும் அற்புதமும் ஆகிய இவ்விரண்டும் எடுத்துக் காட்டியிருக்கும் போது எந்த நோக்கத்திற்காக இப்போது வாக்குவாதம் செய்ய வேண்டும்.

இவ்வாறே இந்நாட்டிலுள்ள ஷேக்மாரும் பீர்மாரும் அவர்களது சீடர்களும் மார்க்கத்தோடு சம்பந்தமில்லாமல் பித்அத் என்னும் தங்களது நவீன (தீய) பழக்க வழக்கங்களில் இரவு பகலாக மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்களுக்கு இஸ்லாத்தின் கஷ்டநஷ்டங்களைப் பற்றியோ ஆபத்துகளைப் பற்றியோ எவ்வித அக்கறையும், அறிவும் இருப்பதில்லை.

அவர்களின் கூட்டங்களுக்கு நீங்கள் செல்வீர்களேயானால் திருக்குர்ஆன், ஹதீதுகளுக்குப் பதிலாக விதவிதமான வீணை வாத்தியங்களையும், மேளதாளம், பாட்டு கச்சேரி முதலான பித்அத் என்னும் நவீன பழக்க வழங்கங்களையே நீங்கள் காண்பீர்கள். இவ்வாறு இருந்தும் அவர்கள் முஸ்லிம்களின் ஆன்மீக தலைவர் என்று கூறிக்கொள்வதோடு எம்பெருமானார் (ஸல்) அவர்களைப் பின் பற்றியவர்களாகப் பெருமைபட்டுக் கொள்கிறார்கள்.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**கட்டுப்படுதல் மற்றும் கலப்பற்ற தன்மையில் உயர் அந்தஸ்தை பெற்றிருந்த பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபக்களைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹஸ்ரத் சாபித் பின் காலித் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உர்ஃபதா (ரலி), ஹஸ்ரத் உத்பா பின் அப்தில்லாஹ் (ரலி), ஹஸ்ரத் கைஸ் பின் அபீ ஸஃஸஆ (ரலி), ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் (ரலி) ஆகியோரின் வாழ்க்கையிலிருந்து அருளுக்குரிய நற்குறிப்புகள்**

**இந்தோநேஷியாவைச் சேர்ந்த நீண்ட கால தொண்டர், வாழ்க்கையை அர்ப்பணித்த மதிப்பிற்குரிய முபல்லிக், இந்தோநேஷியாவின் முன்னாள் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பிரின்ஸிபல் போன்ற தொண்டுகளை செய்த மதிப்பிற்குரிய சுயூத்தி அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்களைப் பற்றிய நற்குறிப்பினை எடுத்துக் கூறி ஜனாஸா காயிப் தொழுகையை ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 30 நவம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **30 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபாக்களில் முதலாவது சஹாபி ஹஸ்ரத் ஸாபித் பின் காலித் அன்ஸாரி ஆவார்கள். இவர்கள் பனூ மாலிக் கோத்திரத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள். பனூ நஜ்ஜாரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். பத்ர் போரிலும், உஹது போரிலுல் பங்கு பெற்றார்கள். மற்றும் யமாமா போரிலும் பங்கு பெற்றார்கள். மேலும் அந்த போரில் அன்னார் ஷஹீதானார்கள். சிலர் பிஃரே மவூனா சந்தர்ப்பத்தில் ஷஹீதானார்கள் என்று கருதுகின்றனர்.

(அல் இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 198 – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

பிறகு அப்துல்லாஹ் பின் உர்ஃபதா ஆவார்கள். அன்னார் ஜாஃபர் பின் அபீதாலிபுடன் அபிஸீனியா ஹிஜ்ரத்தில் பங்கு பெற்றார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை நஜ்ஜாஷியின் (நெருப்பை வணங்குவர்களின்) பக்கம் அனுப்பினார்கள். நாங்கள் ஏறக்குறைய 80 பேர் இருந்தோம்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 201 ஹதீஸ் எண் 4400, முஸ்னது அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உர்ஃபதா பத்ர் போரில் பங்கு பெற்றார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 949 அப்துல்லாஹ் பின் உர்ஃபதா (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அடுத்து உத்பா பின் அப்தில்லாஹ் ஆவார்கள். அன்னாரது தாயின் பெயர் புஷ்ரா பின்த் ஸைது ஆகும். அன்னார் பைஅத்தே உக்பாவிலும், பத்ர், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 1026 உத்பா பின் அப்துல்லாஹ் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 430 உத்பா பின் அப்துல்லாஹ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு கைஸ் பின் அபீ ஸாஸா ஆவார்கள். அன்ஸாரி ஆவார்கள். ஹஸ்ரத் கைஸ் அவர்களின் தந்தையின் பெயர் அமர் பின் ஸைது ஆகும். ஆனால் அவர்கள் தனது சுட்டுப் பெயரான அபூ ஸாஸா என்ற பெயரால் புகழ்பெற்றிருந்தார்கள். அன்னாராது தாயாரின் பெயர் ஷஃபா பின்த்தே ஆஸீம் ஆகும். ஹஸ்ரத் கைஸ் 70 அன்ஸார்களுடன் பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். மேலும் அன்னார் பத்ர், உஹது போரில் பங்கு பெறுவதற்கான நற்பேற்றை பெற்றார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 392 கைஸ் பின் அபீ ஸாஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போருக்காக சென்ற போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது படையுடன் மதீனாவிற்கு வெளியில் புயூத்துஸ் சுக்யா என்ற இடத்தில் தங்கினார்கள். மேலும் சிறிய வயதுடைய குழந்தைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் வந்திருந்தனர். அவர்கள் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் சுக்யாவிலிருந்து தண்ணீர் கொண்டு வரும்படி கூறினார்கள். மேலும் அன்னார் அதன் தண்ணீரைக் குடித்தார்கள். பிறகு அன்னார் சுக்யாவின் வீட்டருகே தொழுதார்கள். சுக்யாவிலிருந்து திரும்பிபோது பெருமானார் (ஸல்) அவர்கள் கைஸ் பின் அபீ ஸாஸா அவர்களிடம் முஸ்லிம்களை எண்ணுமாறு கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அன்னார் தண்ணீரை கண்காணிப்பதற்காகவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தாமே மதீனாவிலிருந்து இரண்டரை கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பிஃரே அபீ இனபா என்ற இடத்தில் தங்கினார்கள்.

முஸ்லிம்களை கணக்கிட்டு கூறுமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதற்கிணங்க ஹஸ்ரத் கைஸ் அவர்கள் எண்ணி விட்டு பெருமானார் (ஸல்) அவர்களிடம், இவர்களது எண்ணிக்கை 313 ஆகும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இதனால் மகிழ்ச்சியடைந்தார்கள்.

மேலும் கூறினார்கள்: தாலூத்துடன் இருந்தவர்களின் எண்ணிக்கையும் இதுவே ஆகும்.

சுக்யா தொடர்பாக இந்த குறிப்பு எழுதப்பட்டுள்ளது: மஸ்ஜிது நபவியிலிருந்து இதன் தூரம் 2 கிலோ மீட்டர் ஆகும். இதன் பழைய பெயர் ஹுஸைக்கா ஆகும்.

ஹஸ்ரத் கல்லாத் அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ஹுஸைக்கா என்ற பெயரை மாற்றி சுக்யா என்று பெயர் வைத்தார்கள்.

கூறுகின்றார்கள்: நான் சுக்யாவை வாங்க வேண்டும் என்ற ஆசை எனது உள்ளத்தில் ஏற்பட்டது. ஆனால் அதற்கு முன்பே ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் அவர்கள் இரண்டு ஒட்டத்தின் விலையைக் கொடுத்து அதை வாங்கி விட்டார்கள். சிலரது கூற்றின்படி 280 திர்ஹம் கொடுத்து அதை வாங்கியதாக கூறப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இது பற்றி கூறப்பட்டபோது, இதை வாங்குவது

மிகச்சிறந்த பயனளிக்கக்கூடிய ஒன்றாகும் என்று கூறினார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாது தொகுதி 4 பக்கம் 23–25 – 1993–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & கிதாபுல் மகாஸி லில்வாக்தி தொகுதி 1 பக்கம் 37–38 – 2013–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அவ்வாறே பத்ர் போரின் நாளின் பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்காக செல்லக்கூடியவர்களுக்கு பின்னால் பாதுகாப்பிற்காக இருக்கின்ற படையை அன்னாரிடம் ஒப்படைத்தார்கள்.

ஒரு முறை அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், நான் எவ்வளவு விரைவாக திருக்குர்ஆனை ஓதி முடிக்கட்டும் என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் 15 இரவுகளில் என்று கூறினார்கள். ஹஸ்ரத் கைஸ் அவர்கள், இதை விட விரைவில் ஓதி முடிப்பதற்கான தகுதியை பெற்றுள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு ஜுமுஆவிலிருந்து இன்னொரு ஜுமுஆவிற்குள் ஓதி முடியுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு கைஸ் அவர்கள், நான் இதை விட விரைவாக முடிக்க முடியும் என்று கூறினார்கள். அன்னார் இவ்வாறே ஒரு நீண்ட காலமாக திருக்குர்ஆனை ஓதி வந்துள்ளார்கள். எதுவரையென்றால், அன்னார் முதுமையை அடைந்து தமது கண்களில் துணியை கட்டிய பிறகு 15 நாளில் திருக்குர்ஆனை ஓதி முடித்தார்கள். அப்போது அன்னார், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொடுத்திருந்த கால அவகாசத்தை நான் ஏற்றிருக்க வேண்டுமே என்று கூறினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 408 கைஸ் பின் அபீ ஸஃஸஆ (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் கைஸ் அவர்களுக்கு அல்ஃபாக்கிஹ் மற்றும் உம்மே ஹாரிஸ் என்ற இரண்டு குழந்தைகள் இருந்தனர். இந்த இருவரின் தாயாரின் பெயர் உமாமா பின்த் மவாஸ் ஆகும். மேலும் அன்னாரது சந்ததி தொடரவில்லை. ஹஸ்ரத் கைஸ் அவர்களுக்கு மூன்று சகோதரர்கள். இவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களது நெருக்கத்தில் இருப்பதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. ஆனால் அவர்கள் பத்ர் போரில் பங்கு பெறவில்லை. இவர்களில் ஹாரிஸ் என்பவர் யமாமா போரில் ஷஹீதனார்கள். ஹஸ்ரத் அபூ கிலாப் மற்றும் ஜாபிர் பின் அபீ ஸாஸா மூத்தா போரில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 392 கைஸ் பின் அபீ ஸஃஸஆ (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு உபைதா பின் ஹாரிஸ் ஒரு சஹாபி ஆவார். அன்னார் பனு முத்தலிப் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களது நெருங்கிய உறவினர் ஆவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 123–124)

இவர்களது தொடர்பு பனூ முத்தலிப் கோத்திரத்தைச் சார்ந்ததாக இருந்தது. அபூ ஹாரிஸ் என்பது அன்னாரது சுட்டுப் பெயராகும். சிலரது கருத்தின்படி அபுல் முஆவிய்யா ஆகும். அன்னாருடைய தாயாரின் பெயர் சுலைஹா பின்த் குஸாயீ ஆகும். ஹஸ்ரத் உபைதா அவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களை விட பத்து வயது அதிகமாகும். ஆரம்ப நாட்களில் ஈமான் கொண்டவர்களைச் சார்ந்தவர்களாவார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு வருவதற்கு முன்பே அன்னார் ஈமான் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா, ஹஸ்ரத் அபூ ஸலமா பின் அப்தில்லாஹ் அஸதி, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அர்கம் மஃஸூமி மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் ஒரே நேரத்தில் ஈமான் கொண்டார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் மிகுந்த கண்ணியத்துடன் பார்க்கப்பட்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்கள் ஆரம்ப நாட்களில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அன்னார் பனூ அப்தே மனாஃபின் தலைவர்களில் ஒருவர் ஆவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 547 உபைதா பின் அல் ஹாரிஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 353 உபைதா பில் அல் ஹாரிஸ் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் தனது இரு சகோதரர்களான ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் மற்றும் ஹுஸைன் பின் ஹாரிஸ் ஆகியோருடன் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள். இவர்களோடு ஹஸ்ரத் மிஸ்தஹ் பின் உஸாஸாவும் இருந்தார்கள். பயணத்திற்கு முன்பாக இவர்கள் அனைவரும் நாஜிஹ் என்ற பள்ளத்தாக்கில் ஒன்றிணைவோம் என்று முடிவெடுத்திருந்தார்கள்.

ஆனால் ஹஸ்ரத் மிஸ்தா பின் உஸாஸா பின்தங்கிவிட்டார்கள். ஏனென்றால் அவர்களை பாம்பு கடித்து விட்டது. ஹஸ்ரத் மிஸ்தா அவர்களை பாம்பு கடித்தது தொடர்பாக இவர்களுக்கு அடுத்த நாள் தெரிய வந்தது. எனவே இவர்கள் திரும்பிச் சென்றனர். மேலும் அவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு மதீனா வந்தனர். மதீனாவில் இவர்கள் அப்துல்லாஹ் பின் சலமாவின் வீட்டில் தங்கினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 37 உபைதா பின் அல் ஹாரிஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் மற்றும் உமைர் பின் ஹுமாம் ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் மற்றும் ஹஸ்ரத் உமைர் பின் ஹுமாம் ஆகிய இருவரும் பத்ர் போரில் ஷஹீதானார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 1214 உமைர் பின் அல்ஹுமாம் (ரலி) 1990–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இவர்களது இரண்டு சகோதரர்கள் ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் பின் ஹாரிஸ் ஆகியோரும் அன்னாருடன் கலந்து கொண்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 38–39 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பெருமனார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்த பிறகு நிராகரிப்பாளர்களின் தீங்கிருந்து தப்பிப்பதற்காகவும், முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காகவும் சில திட்டங்களை மேற்கொண்டார்கள். அது பெருமானார் (ஸல்) அவர்களது மிகச் சிறந்த அரசியல் தகுதியையும், போர் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய தொலைநோக்குப் பார்வையையும் கொண்டதாக இருந்தது என்பதற்கான மிகத் தெளிவான சான்றாகும்.

இதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்: வரலாற்றிலிருந்து நிரூபணமாகியுள்ளது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களது தலைமையில் அனுப்பிய முதல் படையானது இக்ரிமா பின் அபீஜஹிலின் ஒரு படையை எதிர்கொள்ள வேண்டியது வந்தது. அதில் மக்காவிலுள்ள இரண்டு பலவீனமான முஸ்லிம்கள் குரைஷிகளுடன் இணைந்து வந்திருந்தனர். அவர்கள் குறைஷிகளை விட்டு விட்டு முஸ்லிம்களுடன் வந்து இணைந்தனர்.

அறிவிப்பில் வந்துள்ளது: முஸ்லிம்களின் படை நிராகரிப்பவர்களின் படைக்கு முன்னே வந்தபோது பனூ ஸுஹ்ரா மற்றும் பனூ நஃபலின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்த மிக்தாது பின் அம்ர் மற்றும் உத்பா பின் கஸ்வான் ஆகிய இருவர் நிராகரிப்பவர்களிலிருந்து வெளியேறி முஸ்லிம்களிடம் வந்து இணைந்தனர். இந்த இருவரும் முஸ்லிம்கள் ஆவர். நிகாகரிப்பவர்களுடன் ஒன்றாக வருவதைப் போன்று வந்து இவர்கள் முஸ்லிம்களுடன் இணைந்தனர். இப்படிப்பட்ட மக்களுக்கு குரைஷிகளின் அநீதியிலிருந்து விடுதலை கிடைப்பதும், அவர்கள் முஸ்லிம்களோடு இணைவதும்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த குழுவை அனுப்பியதன் நோக்கம் ஆகும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 324)

ஹிஜ்ரத்திற்கு 8 மாதத்திற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களை 60 அல்லது 80 சவாரிகளுடன் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸிடம் வெள்ளை நிறத்தினாலான கொடியை கொடுத்தார்கள். அதை ஹஸ்ரத் மிஸ்தா பின் உஸாஸா அவர்கள் தூக்கிப் பிடித்தார்கள்.

இந்த படை அனுப்பப்பட்டதன் நோக்கம் என்னவென்றால், குரைஷிகளின் வியாபாரக் குழுவை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதாகும். குரைஷி படையின் அமீர் அபூ சுஃப்யான் ஆவான். சிலரது பார்வையில் இக்ரிமா பின் அபீஜஹில் ஆவார். சிலரது பார்வையில் மிக்ரஸ் பின் ஹஃப்ஸ் ஆவார். இந்த படையில் 200 நபர்கள் இருந்தனர். அவர்கள் வியாபாரப் பொருட்களை எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். சஹாபாக்களின் இந்த ஜமாஅத் ராபிக் பள்ளத்தாக்கில் இந்த குழுவை தடுத்து நிறுத்தினார்கள். இந்த இடத்தை வத்தான் என்றும் கூறப்படுகிறது. இரண்டு படைக்கும் இடையே வில் சண்டை மட்டுமே நடந்தது. வேறு எதனைக் கொண்டும் சண்டை நடக்கவில்லை. மேலும் போருக்கான அணிவகுப்பும் சரிசெய்யப்படவில்லை.

முஸ்லிம்கள் தரப்பிலிருந்து வில் எய்திய முதல் சஹாபி சஅது பின் அபீ வக்காஸ் ஆவார்கள். இந்த அம்புதான் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து முதல் முறையாக விடப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் இக்தாத் பின் அஸ்வத், ஒயைனா பின் கஸ்வான் மற்றும் இன்னொரு வரலாற்று நூலில் உத்பான் பின் கஸ்வான் என்பவரைப் பற்றியும் எழுதப்பட்டுள்ளது ஆகியோர் நிரகாரிப்பாளர்களின் கூட்டத்திலிருந்து வெளியேறி முஸ்லிம்களிடம் வந்து இணைந்தனர். ஏனென்றால் இந்த இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள் முஸ்லிம்களிடம் செல்ல விரும்பினார்கள்.

ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களது தலைமையில் இது இரண்டாவது சரய்யா ஆகும். அம்பு எயப்பட்ட பிறகு இரண்டு பிரிவினரும் பின் வாங்கினர். ஏனென்றால் முஸ்லிம்கள் மீது நிரகாரிப்பாளர்களுக்கு எந்த அளவுக்கு அச்சம் ஏற்பட்டது என்றால், முஸ்லிம்களின் ஒரு மிகப்பெரும் படை இருக்கின்றது. அதன் மூலம் இவர்களுக்கு உதவி கிடைக்கின்றது என்று அவர்கள் எண்ணினார்கள். இதன் காரணமாக அவர்கள் அச்சத்திற்குள்ளாகி பின் வாங்கினர். மேலும் முஸ்லிம்களும் இதன் காரணமாக அவர்களை பின் தொடரவில்லை.

(அச்சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 215–216 உபைதா பின் அல்ஹாரிஸ் (ரலி) – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & சீரத் இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 592 சர்யா உபைதா பின் அல்ஹாரிஸ் (ரலி) – 1995 ஆம் ஆண்டு மிஸ்ரிலுள்ள முஸ்தஃபா அல்பாபில் அச்சிடப்பட்டது & தாரீக் அத்திப்ரா தொகுதி 2 பக்கம் 12 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இரு தரப்பினருக்கும் இடையில் சண்டை நிகழத்தான் செய்தது. ஆனால் நிராகரிப்பவர்கள் பின்வாங்கிச் சென்றதால் முஸ்லிம்கள் அவர்களை பின்தொடரவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீனில் எழுதியுள்ளார்கள்:

உத்தான் போரிலிருந்து திரும்பி வந்ததும் ரபீவுல் அவ்வல் மாதத்தின் ஆரம்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் தனது நெருக்கமான ஒரு உறவினரான உபைதா பின் ஹாரிஸ் அவர்களின் தலைமையில் 60,70 சவாரிகளைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். இதன் நோக்கம், குரைஷிகளின் நோக்கத்தைப் பற்றி அறிவதற்காக இருந்தது. அதாவது குறைஷிகளின் தாக்குதல் தொடர்பான விஷயத்தை அறிவதற்காகவே அனுப்பப்பட்டது. உபைதா பின் ஹாரிஸ் மற்றும் அவர்களுடன் இருப்பவர்கள் சில மைல் தூரத்தை கடந்து சனிய்யத்துல் மர்ரா என்ற இடத்தை அடைந்த போது இக்ரிமாவின் தலைமையில் 200 இளைஞர்களைக் கொண்ட ஒரு படை கூடாரத்தை அமைத்திருப்பதைக் கண்டார்கள். ஒருவர் மற்றவருக்கு முன்னால் வந்தனர். இருவருக்குமிடையில் அம்புகளால் சண்டையும் நடந்தது. இந்த முஸ்லிம்களுக்குப் பின்னால் வேறு சிலரும் இருக்கலாம் என்ற அச்சத்தில் நிராகாரிப்பவர்கள் முஸ்லிம்களுடன் போர் செய்யவில்லை. முஸ்லிம்களும் அவர்களைப் பின்தொடரவில்லை. ஆனால் மிக்தாத் பின் அமர், உத்பா பின் கஸ்வான் என்ற இருவரும் நிராகரிப்பவர்களின் படையான இக்ரிமாவின் படையிலிருந்து ஓடி வந்து முஸ்லிம்களிடம் இணைந்தனர்.

மேலும் எழுதப்பட்டுள்ளது: முஸ்லிம்களுடன் இணைய வேண்டும் என்பதற்காகத்ததான் இவர்கள் நிராகரிப்பவர்களுடன் ஒன்றிணைந்து வந்திருந்தனர். ஏனென்றால் அவர்கள் உள்ளத்தால் முஸ்லிம்களாக இருந்தனர். ஆனால் பலவீனத்தின் காரணமாக குரைஷிகளுக்கு அஞ்சியவாறு ஹிஜ்ரத் செய்யாமல் இருந்தனர். மேலும் இந்த சம்பவம் கூட குரைஷிகளின் உள்ளத்தை பலவீனப்படுத்தி இருக்கலாம். மேலும் இதன் காரணமாக அவர்கள் அஞ்சியவாறு பின்வாங்கிச் சென்றிருக்கலாம். குறைஷிகளிடன் படையானது நிச்சயமாக அது ஒரு வணிகக் குழு கிடையாது. வணிகக் குழுவின் தோற்றத்தில் அந்த மக்கள் முறையாக ஒரு படையை அமைத்து அவர்கள் வெளியேறினார்கள். அவர்களிடம் போர் ஆயுதங்களும் இருந்தன.

இவர்களைப் பற்றி இப்னு இஸ்ஹாக் அவர்கள், ஒரு மிகப்பெரிய படை என்ற சொற்களை பயன்படுத்தியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும் அவர்கள் தாக்குதல் தொடுப்பதற்காக வந்திருந்தனர். எனவேதான் முஸ்லிம்களும் அம்பை எய்தினர். முதலில் வில்லை எய்தது நிராகரிப்பார்கள்தான் என்பது இதிலிருந்து தெளிவாக தெரிய வருகிறது. இது இறைவனது அருளாகும். அதாவது முஸ்லிம்களின் வீரத்தையும், தம்மைச் சார்ந்தவர்கள் சிலர் முஸ்லிம்களின் பக்கம் செல்வதையும் பார்த்த அவர்களுக்கு தைரியம் ஏற்படவில்லை. மேலும் அவர்கள் திரும்பிச் சென்று விட்டனர். முஸ்லிம்களுக்கு இந்த சண்டையினால் ஏற்பட்ட பயன் என்னவென்றால், இரண்டு முஸ்லிம் ஆன்மாக்கள் குரைஷிகளின் அநீதியிலிருந்து இரட்சிப்பை பெற்றது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 328–329)

அவர்கள் பத்ர் போர் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து வலீத் பின் உத்பாவிடம் சண்டையிட்டார்கள். நபிமொழியில் வருகின்றது. திருக்குர்ஆனின் வசனமும் இந்த சந்தர்ப்பத்தைக் குறித்து இறங்கியது. ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

هٰذَانِ خَصْمَانِ اخْتَصَمُوْا فِيْ رَبِّهِمْ என்ற வசனம் பத்ர் நாளில் போரிட்டவர்கள் தொடர்பாக இறங்கியது. அதாவது ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப், ஹஸ்ரத் அலி பின் தாலிப், ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் மற்றும் உதைபா பின் ரபீஆ, ஷஃபா பின் ரபீஆ மற்றும் வலீத் பின் உத்பா போன்றவர்களைக் குறித்து அது இறங்கியது.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 2 பக்கம் 419 கிதாபுத் தஃப்ஸீர், தஃப்ஸீர் சூரத்துல் ஹஜ், ஹதீஸ் எண் 3456 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

இந்த வசனத்தின் பொருள், சண்டையிடக்கூடிய இந்த இருவரும் தமது இறைவனைக் குறித்து வாக்குவாதம் செய்தனர். அதன் முழு வசனம் இவ்வாறாகும்.

هٰذٰنِ خَصْمٰنِ اخْتَصَمُوْا فِيْ رَبِّهِمْ ۔ فَالَّذِيْنَ كَفَرُوْا قُطِّعَتْ لَهُمْ ثِيَابٌ مِّنْ
نَّارٍ ۔ يُصَبُّ مِنْ فَوْقِ رُءُوْسِهِمُ الْحَمِيْمُ

(நம்பிக்கை கொண்டோர், மறுப்போர் ஆகிய) இவ்விரு வகுப்பாரும் தமது இறைவனைக் குறித்து வாக்குவாதம் செய்தனர். எனவே (இவர்களுள்) நிராபரிப்போருக்கு நெருப்பாலான ஆடைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தலைகளில் கொதிநீர் ஊற்றப்படும். (22:20)

எவ்வாறிருப்பினும் அபூதாவூதில் இது குறித்த முழுமையான விவரம் கிடைக்கின்றது. ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உத்பா

பின் ரபீஆ மற்றும் அவருக்குப் பின்னால் அவரது மகன் மற்றும் சகோதரர்களும் வெளியேறினர். மேலும் உரத்த குரலில், எங்களுடன் சண்டையிடுவதற்காக யார் வருகின்றனர் என்று கூறினர். அப்போது அன்ஸாரைச் சார்ந்த பல இளைஞர்கள் அதற்கு பதிலளித்தார்கள். நீங்கள் யார் என்று உத்பா கேட்டார். அதற்கு அவர்கள் நாங்கள் அன்ஸார் என்று பதிலளித்தனர். உத்பா அவர்களிடம், உங்களுடன் எனக்கு எந்தவொரு தொடர்பும் கிடையாது. நாங்கள் எங்களது சிறிய தந்தையின் மகனோடு சண்டையிடுவதற்கான எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றோம் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஹம்ஸாவே! எழுங்கள். அலியே! எழுந்து நில்லுங்கள். உத்பா பின் ஹாரிஸே! முன்னேறுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களது குரலைக் கேட்டதுமே ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் உத்பாவின் பக்கமும், நான் ஷஃபாவின் பக்கமும் சென்றோம். உபைதா பின் ஹாரிஸிற்கும் வலீதிற்கும் இடையே சண்டை ஏற்பட்டது. மேலும் ஒருவர் மற்றவருக்கு காயத்தை ஏற்படுத்தினோம். பிறகு நாங்கள் வலீதின் பக்கம் கவனம் செலுத்தியவாறு அவரைக் கொன்றோம். மேலும் உத்பாவை போர் களத்திலிருந்து தூக்கிக் கொண்டு வந்தோம்.

(சுனன் அபீதாவூது, கிதாபுல் ஜிஹாது, பாப் ஃபில் முபாஸிரத் ஹதீஸ் எண் 2665)

போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களுக்கு உத்பா காயத்தை ஏற்படுத்தி இருந்தார். எனவே அவர்களது முழங்கால் வெட்டப்பட்டிருந்தது. பிறகு அன்னாரை பெருமானார் (ஸல்) அவர்கள் தூக்கினார்கள். பத்ர் போர் முடிவுற்ற பிறகு பத்ர் மைதானத்திற்கு அருகிலேயே இருக்கின்ற ஸஃப்ரா என்ற இடத்தில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். மேலும் அங்கேயே அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 207–208 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா மின் மனாகிப் உபைதா பின் அல்ஹாரிஸ் (ரலி), ஹதீஸ் எண் 4862 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & கிதாப் லுகாத்துல் ஹதீஸ் ஸாத் பக்கம் 67 – கராச்சியிலுள்ள ஆராம்பாக் மீர் முஹம்மது அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. உபைதா அவர்களின் முழங்கால் வெட்டப்பட்டிருந்தபோது அதிலிருந்து அதிகமான இரத்தம் வெளி வந்து கொண்டிருந்தது. அப்போது சஹாபாக்கள் ஹஸ்ரத் உபைதா அவர்களை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். அப்போது அன்னார், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் ஷஹீது இல்லையா? என்று கேட்டார்கள். அன்னார் காயமுற்றிருந்தார்கள். போரின் சந்தர்ப்பத்திலேயே ஷஹீதாகவில்லை. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், ஏனில்லை? நீங்கள் ஷஹீதைச் சார்ந்தவராவீர்கள் என்று கூறினார்கள்.

இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வரப்பட்டபோது தமது மடியில் அன்னாரின் தலையை வைத்தார்கள். பிறகு உபைதா அவர்கள் கூறினார்கள். இன்று அபூதாலிப் உயிருடன் இருந்திருக்க வேண்டுமே! அவர் உயிருடன் இருந்திருந்தால், அவர் இதற்கு அதிக தகுதி படைத்தவர் ஆவார் என்று அடிக்கடி கூறி வந்தார்.

وَنُسْلِمُهُ حَتّٰى نُصَرَّعَ حَوْلَهُ وَنَذْهَلَ عَنْ اَبْنَاءِنَا وَالْحَلَائِلِ

அதாவது நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களை (எதிரிகளாகிய) உங்களிடம் ஒப்படைத்து விடுவோம் என்பது பொய்யாகும். அது எப்போது நடக்கும் என்றால் நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அருகிலிருந்து ஓடிவிடும் நிலையில்தான் அது நடக்கும் என்று அவர்கள் கூறி வந்தார்கள். இதுதான் அந்த மக்களின் உணர்வாகும். ஷஹாதத்தின்போது உபைதா பின் ஹாரிஸ் அவர்களது வயது 63 ஆகும்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 208 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா மின் மனாகிப் உபைதா பின் அல்ஹாரிஸ் (ரலி) ஹதீஸ் எண் 4863 – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 547 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இந்த சஹாபாக்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறிய பிறகு நான் இந்தோனேஷியாவைச் சார்ந்த வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு முபல்லிக்கைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்கள் கடந்த நாட்களில் வஃபாத்தாகி விட்டார்கள். அவர்களது பெயர் சயூத்தி அஸீஸ் அஹ்மது ஆகும். நவம்பர் 19 அன்று அன்னாரது மரணம் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

சயூத்தி சாஹிப் அவர்களுக்கு இதயக் கோளாறு இருந்தது. சிகிச்சைக்காக அவர்கள் ரப்வா அனுப்பப்பட்டார்கள். ரப்வாவிலுள்ள தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் அவர்களுக்கு அறுவை சிகிச்சை நடந்தது. ஆனால் அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு உடல்நலக்குறைவின் காரணமாக 19 நவம்பர் அன்று மரணமடைந்து விட்டார்கள். அவர்களது குடும்பத்தில் அவர்களது மனைவி, இரண்டு மகன்கள் மற்றும் பத்து பேரக் குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களில் ஆறு பேர் வக்ஃபே நவ் ஆவார்கள்.

சயூத்தி அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் 17 ஆகஸ்ட் 1944 ல் பூனேஜுனூபிசூலாவேஸியில் பிறந்தார்கள். அவர்கள் செப்டம்பர் 1966 லிருந்து அக்டோபர் 1971 வரை ரப்வாவிலுள்ள ஜாமிஆவில் கல்வி பயின்றார்கள். ஏப்ரல் 1972 ல் மேலிட முபல்லிக்காக இந்தோனேஷியாவில் பணியமர்த்தப்பட்டார்கள். 1985 ல் அவர்களுக்கு ஷாஹிது பட்டம் கிடைத்தது. அவர்களது சிறந்த பணியின் காரணமாக அவர்களுக்கு வழங்கப்பட்டது. 2000–ஆம் ஆண்டு அவர்களுக்கு ஹஜ் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. 1972 முதல் 1979 வரை தென் ஸமாட்ராவிலும், லாம்பூங், ஜாம்பி மற்றும் கேன்ங்கூலோவிலும் முபல்லிக்காக தொண்டாற்றியுள்ளார்கள். 1979 முதல் 1981 வரை முஅல்லிமீன்களுக்கு ஆசிரியராக தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியம் கிடைத்தது. 1981 ல் பூர்போகேத்தூவில் முபல்லிக்காக பணியமர்த்தப்பட்டார்கள். 82–ல் முஅல்லிம் மற்றும் முபல்லிக்களின் வகுப்புகளில் நாயிப் டைரக்டராக பணியமர்த்தப்பட்டார்கள். 82 முதல் 92 வரை இந்தோனேஷியாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பிரின்ஸ்பலாக இருந்தார்கள். அப்போதுதான் 1985 ல் அன்னாருக்கு ஷாஹிது பட்டம் வழங்கப்பட்டது.

1992 முதல் 2016 வரை ஏறக்குறைய 20 வருடங்கள் தப்லீக் களத்தில் இருந்துள்ளார்கள். 2016 முதல் வஃபாத் வரை இந்தோனேஷியாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பிரின்ஸ்பலாக தொண்டாற்றக்கூடிய நற்பேற்றை பெற்றார்கள். 1973 ல் அவர்களது திருமணம் முபல்லிக் அப்துல் வாஜிது சாஹிப் அவர்களது மகளான அஃபீபாவுடன் நடைபெற்றது. இவர்கள் இந்தோனேஷியாவின் அமீரான மதிப்பிற்குரிய மவ்லவி அப்துல் பாசித் சாஹிப் அவர்களது மூத்த சகோதரி ஆவார்கள். இவர்கள் மூலமாக சயூத்தி அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. வர்தியா ஹாலித், ஹாரிஸ் அப்துல் பாரி, ஸஆதத் அஹ்மது, அத்யத்துல் அலீம் போன்றோர்.

அஃபீஃபா சாஹிபா அவர்கள் 2009 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். அதற்குப் பிறகு சயூத்தி சாஹிப் அவர்கள் அரீனா தாமாயன்தி சாஹிபாவை திருமணம் செய்தார்கள். அவர்கள் மூலமாக இவர்களுக்கு எந்த குழந்தையும் கிடையாது.

அன்னார் தனது குடும்பத்தில் அஹ்மதிய்யத் எவ்வாறு வந்தது என்பது தொடர்பாக M.T.A வில் ஒரு நேர்காணல் கொடுத்துள்ளார்கள். அதில் அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கும் எனது குடும்பத்திற்கும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான மிக முக்கிய காரணம் என்னவென்றால், எனது பாட்டனார் இறுதி காலத்தில் இமாம் மஹ்தி வருவார் என்றும் அவர் வந்தால் நீங்கள் அனைவரும் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் வஸிய்யத் செய்திருந்தார்கள். இந்த வஸிய்யத்தை முழுமை செய்வதற்காக எங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இரண்டு முறை ஹிஜ்ரத் செய்தனர். 1959 ல் எங்களது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் லாம்பங்கை நோக்கி ஹிஜ்ரத் செய்தனர்.

1963 ல் மவ்லானா ஸீனி தஹ்லான் சாஹிப் தப்லீக்கிற்காக லாம்பங் வந்திருந்தார்கள். நாங்கள் அவர்களை சந்தித்தோம். அவர்கள் இமாம் மஹ்தி வந்து விட்டார் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இமாம் மஹ்தி தோன்றி விட்டார் என்பதற்கான ஆதாரம் என்ன என்று நான் வினவினேன். அதற்கு அவர்கள், இறுதி காலத்தில் தோன்றக்கூடியவரின் உண்மைத்துவம் தொடர்பாக ஒரு புத்தகத்தைக் கொடுத்தார்கள். மேலும் அந்த புத்தகத்தை படிக்குமாறும் கூறினார்கள். நான் அந்த புத்தகத்தை படித்தேன். படித்த பிறகு வரக்கூடிய இமாம் மஹ்தி தோன்றி விட்டார். மேலும் அந்த இமாம் மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களே ஆவார்கள் என்ற நிச்சய உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: 13 பிப்ரவரி 1963–ஆம் ஆண்டு 19 வது வயதில் நானும் எனது குடும்பத்தைச் சார்ந்த 40 நபர்களும் மல்வானா ஸீனி தஹ்லான் சாஹிப் மூலமாக பைஅத் செய்தோம்.

மேலும் கூறுகின்றார்கள்: 1963 ல் ரப்வாவிலிருந்து வகீலுத் தப்ஷீர் அவர்கள் பாண்ட்விங் வந்திருந்தார்கள். அந்த நேரத்தில் நானும் அங்கிருந்தேன். ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளையும், முபல்லிக்களையும் சந்தித்து ஜமாஅத்தின் உண்மைத்துவம் தொடர்பாக மேலும் என்மீது உண்மை வெளிப்பட்டு விட்டது.

ஜாமிஆவில் சேர்ந்தது தொடர்பாக அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: 1963–ஆம் ஆண்டு தென் ஸமாட்ராவில் முபல்லிகாக இருந்த மல்வானா அபூபக்ர் அய்யூப் சாஹிப் அவர்கள் புதிய அஹ்மதிகளின் தர்பிய்யத்திற்காக லாம்பங் வந்தார்கள். அப்போது அவர்கள் தப்லீக் களத்தில் பணியாற்றிய மல்வானா சய்யிது ஷா முஹம்மது ஜைலானி அவர்களுக்கு அறிக்கை ஒன்றை கொடுத்தார்கள். அதில் லாம்பங்கில் பேகிஸ் சமுதாயத்தைச் சார்ந்த சிலர் பைஅத் செய்துள்ளனர். ஆனால் தற்போது வரை இந்த சமுதாயத்திலிருந்து எவரும் முபல்லிக் ஆகவில்லை. ஆனால் ஜாவா மற்றும் ஸன்தா சமுதாயத்திலிருந்து முபல்லிக்கள் இருக்கின்றனர் என்று கூறியிருந்தார்கள். மேலும் அவர்கள், நான் அங்கு மூன்று இளைஞர்களை பார்த்தேன். அவர்களை கல்வி கற்பதற்காக ரப்வாவிற்கு அனுப்பலாம் என்றும் எழுதியிருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: மூன்று இளைஞர்களின் நானும் ஒருவன் ஆவேன். எங்கள் மூவரையும் ரப்வாவிலுள்ள ஜாமிஆவில் படிப்பதற்காக சிபாரிசு செய்யப்பட்டது. எங்களிடம் பாஸ்போர்ட் தயார் செய்யுமாறு கூறப்பட்டது. ஆனால் இந்தேனேஷியாவில் நிலைமைகள் சரியில்லாததனால் பாஸ்போர்ட் தயார் செய்ய முடியாமல் போயிற்று. பிறகு 1966 ல் மவ்லானா இமாமுத்தீன் சாஹிபோடு பாகிஸ்தான் அசம்பிளியில் விசாவிற்காக விண்ணபித்தோம். 15 நிமிடத்திற்குள் விசா கிடைத்தது. பிறகு நாங்கள் கராச்சி சென்றோம். பிறகு அங்கு தங்கினோம். பிறகு இரயில் மூலமாக ரப்வா சென்றடைந்தோம். நாங்கள் ஸ்டேஷனில் இறங்கி நடந்தவாறே ஜாமிஆ சென்றோம்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஜாமிஆவிலுள்ள அதிகமான மாணவர்கள் எங்களை வரவேற்றார்கள். புதியதொரு சூழல் இருந்தது. ஆரம்ப நாட்களில் பெரிய பெரிய கஷ்டங்கள் இருந்தன. ஆனால் பிறகு அது பழகி விட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: மூன்று நாட்களில் எங்களுக்கு ஜாமிஆவில் இணைவதற்கான அனுமதி கிடைத்து விட்டது. எங்களுக்கு ஆசிரியராக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மாஸ்டர் அதா முஹம்மது சாஹிப் இருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ரப்வாவில் நாங்கள் தங்கியிருந்தபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல சஹாபாக்களை சந்தித்துள்ளோம். எப்போதும் ஏதாவதொரு சஹாபியை சந்திப்பதற்கான வாய்ப்பை நான் எதிர்பார்த்துக் கொண்டிப்பேன். மேலும் அவர்களை சந்தித்து அவர்களுடன் பேசியவாறு அவர்களுடைய கால்களை அமுக்கி விடுவேன்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுடனான சந்திப்பு தொடர்பாக கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதல் முறையாக நாங்கள் அன்னாரை சந்திக்கச் சென்றோம். ஹுஸூர் அவர்கள் எங்களை கட்டித் தழுவினார்கள்.

ஹுஸூர் அவர்கள் எங்களது கன்னங்களில் தட்டிக் கொடுத்தவாறு, இவர்கள் இந்தோனேஷியாவிலிருந்து வந்துள்ளனர். நீங்கள் அனைவரும் தொலைவிலிருந்து வந்துள்ளீர்கள். வெளிநாட்டைச் சார்ந்த நீங்கள் அனைவரும் எனது குழந்தைகளாவீர்கள் என்று கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஆன்மீக ஒளி எப்போதும் எங்களுடன் இருந்தது. இதன் காரணமாக எங்களது அனைத்து கஷ்டங்களும் எளிதாகிவிட்டனது.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால் என்னிடம் வாருங்கள் என்று கூறியிருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் இந்தோனேஷியா திரும்பி செல்வதற்கு முன்பாக ஹுஸூர் அவர்களை சந்திக்கச் சென்றேன். மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு நான் சில புத்தங்கள் வேண்டும். நான் ஒரு அலுவலகத்திற்கு சென்றேன். ஆனால் எனக்கு கிடைக்கவில்லை என்று கூறினேன். பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தனது பேனாவினால் ஒரு குறிப்பு எழுதினார்கள். அதில் சுயூத்தி அவர்களுக்கு புத்தகங்களைக் கொடுக்கவும் என்று எழுதினார்கள்.

இதற்குப் பிறகு எனக்கு ரூஹானீ கஸாயினின் முழு தொகுப்பும் வழங்கப்பட்டது. அது இப்போது வரை என்னிடத்தில் இருக்கின்றது. செல்வதற்கு முன்பாக ஹுஸூர் அவர்கள் நீண்ட நேரம் வரை என்னைக் கட்டித் தழுவினார்கள். மேலும் எனது காதில், உனது தலைவரிடம் நன்றிகேடு காட்டாதீர்கள். இதுவே எனது அறிவுரையாகும் என்று கூறினார்கள்.

ஒரு சம்பவத்தை எழுதுகின்றார்கள்: 1993–ஆம் ஆண்டு இந்தோனேஷியாவின் அமீர் மதிப்பிற்குரிய ஷரீஃப் அஹ்மது போகஸ் அவர்கள் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியை வெற்றிகரமாக ஆக்குவதற்காக என்னை பிலிப்பைன் அனுப்பினார்கள். மேலும் இது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது கட்டளையாகும் என்று கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் மிகவும் பலவீனமானவனாவேன். எனக்கு மொழியும் தெரியாது என்று கூறினேன். அதற்கு அவர்கள், உங்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கின்றது என்று கூறினார்கள். எனவே நான் ஜமாஅத் சென்டருக்கு சென்றேன். அங்கு செல்வதற்கு நமேலா மற்றும் ஸம்வாகாஸ்டி வழியாக செல்ல வேண்டியதுள்ளது. உணவு தொடர்பாக அன்னார் கூறும்போது, நான் சாப்பிட்டபோது அந்த உணவு எனக்கு வயிற்றுக் கோளாறை ஏற்படுத்தியது. மிகுந்த பலவீனம் ஏற்பட்டது. அப்படிப்பட்ட நேரத்தில் நான் துஆ செய்தேன். அல்லாஹ்வே! நான் இங்கு மரணித்து விட்டால் எனது ஜனாஸாவை தொழ வைக்கக்கூடிய எந்தவொரு முஸ்லிமும் இங்கு கிடையாது.

அன்னார் கூறுகின்றார்கள்: இரவில் நான் கனவில் பார்த்தேன். ஒரு நர்ஸ் அவர்கள் யூனிஃபார்ம் அணிந்திருந்தார்கள். என்னிடத்தில் வந்து எனது கை மற்றும் தலையை தடவியவாறு ஊதினார்கள். அப்போது எனது உடல் குளிர்ந்து விட்டதைப் போன்று நான் உணர்ந்தேன். அந்த குளிர்ந்த தன்மையானது எனது கால்களின் விரல்களின் வழியாக வெளியேறி விட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: காலையில் நான் எழுந்தபோது முற்றிலும் குணமாகி விட்டேன். எனவே நான் தாவியை நோக்கி சென்றேன். அல்லாஹ்வின் அருளால் மூன்று மாதத்திற்கு அங்கு 130 பேர் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தனர்.

இந்தோனேஷியாவின் அமீர் அப்துல் பாஸித் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: சுயூத்தி அஸீஸ் சாஹிப் அவர்களை மச்சான் என்ற முறையிலும் ஒரு முபல்லிக் என்ற முறையில் நான் பார்த்துள்ளேன். நன்றாக அவர்களை பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. எளிமையான நபராவார். பணிவிலும், தன்னடக்கத்திலும் உயர்ந்த முன்மாதிரியான

நபராவார். பொறுமையை மேற்கொள்ளக்கூடியவர். துஆ செய்யக் கூடியவர். தஹஜ்ஜுத் தொழக் கூடியவர். அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருப்பவர் ஆவார்கள். மேலும் கிலாஃபத் அமைப்புடனும், கலீஃபாக்களுடனும் கலப்பற்ற மற்றும் தூய்மையான அன்பை வைத்திருந்தார்கள். தமது சொந்த பணிகளை விட ஜமாஅத் பணிகளுக்கே அதிக முக்கியத்தும் கொடுத்து வந்தார்கள். ஒரு வெற்றிகரமான முபல்லிக் ஆவார்கள். எந்த பொறுப்புகள் அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்டாலும் கலப்பற்ற தன்மையோடும், தம்மைத் அர்ப்பணித்தவாறு அந்த பொறுப்பை நிறைவேற்றக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் முபல்லிக்காகவோ, ஜாமிஆவின் பிர்ன்ஸிபலாகவோ அல்லது தப்லீக் களத்தில் இருப்பவர்களாகவோ இருந்தாலும் சரி அன்னார் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கு ஒரு உயர்தரமான முன்மாதிரியாக விளங்கினார்கள்.

இந்தோனேஷியாவின் துணை பிரின்ஸ்பல் அவர்கள் கூறுகின்றார்கள்: சயூத்தி சாஹிப் ஜாமிஆவில் ஐந்தாவது, நான்காவது மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு திருக்குர்ஆன் மொழியாக்கத்தை கற்றுக் கொடுத்தார்கள். கலாமையும் அவர்கள் படித்துக் கொடுத்தார்கள். அதற்காக அன்னார் இர்ஃபானே இலாஹி (இறைஞானம் என்ற நூலை இந்தோனேஷிய மொழியில் மொழியாக்கம் செய்திருந்தார்கள். நோயின் காரணமாக அவர்களது உடல்நிலை பலவீனமானது. அங்கும் இங்கும் செல்வதில் கஷ்டம் ஏற்பட்டது. பிறகு மாணவர்கள் அலுவகத்திற்கு வந்து படித்துச் சென்றனர்.

அன்னார் ரப்வா செல்வதற்கு முன்பு 8 நவம்பர் அன்று தனது கடைசி வகுப்பை எடுத்தார்கள். மேலும் எப்போதும் கூறி வந்தார்கள். அதாவது ஜாமிஆவின் தரம் இப்போது ஷாஹிது பட்டம் பெறத்தக்கதாக ஆகிவிட்டது. ஹுஸூர் அவர்கள் அதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். எனவே நீங்கள் காலத்தின் கலீஃபாவின் விருப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் பெரும் முயற்சி செய்ய வேண்டும்.

அன்னாரது ஒரு மகள் மர்தியா சாஹிபா எழுதுகின்றார்கள்: எனது தந்தை தனது முழு வாழ்க்கையையும் ஜமாஅத்திற்காக அர்ப்பணித்திருந்தார்கள். தமது வாழ்க்கையை ஜமாஅத்திற்காக தியாகம் செய்தார்கள். நாங்கள் மிகக்குறைவாகவே சுற்றுலா சென்றிருப்போம். ஆனால் வாழ்க்கையை அர்ப்பணித்தவரின் வாழ்க்கை இவ்வாறுதான் இருக்கும் என்பதை நாங்கள் புரிந்தவர்களாக இருந்தோம். மேலும் அவர்கள் எங்களிடம், வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களின் முழு நேரமும் ஜமாஅத்திற்காகவே ஆகும் என்று கூறி வந்தார்கள். மேலும் எனது தந்தை, அதிகமாக போதனை செய்ய மாட்டார்கள்.

மாறாக, தனது நடைமுறையின் மூலமாக தனது முன்மாதிரியை வெளிப்படுத்தி வந்தார்கள். எனது தாய் நோயுற்றபோது பொறுமையுடன் அவர்களுக்கு தொண்டாற்றி வந்தார்கள். வீட்டு வேலைகளை சுயமே அவர்கள் கவனித்து வந்தார்கள். ரமலான் நாட்களில் ஸஹரி மற்றும் இஃப்தாருக்கான ஏற்பாட்டை சுயமே செய்வார்கள். எவரிடமும் எனக்காக இந்த பணியை செய்யுங்கள் என்று கூறியது கிடையாது. தமது வேலைகளை சுயமே செய்யக்கூடிய பழக்கத்தை கொண்டிருந்தார்கள்.

அவர்களது மகன் ஸஆதத் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: எங்களது தர்பிய்யத்தை மிகவும் பொறுமையும் செய்து வந்தார்கள். ஆனால் தொழுகை விஷயத்தில் மிகுந்த கண்டிப்புடன் நடந்து கொண்டார்கள். குழந்தைப் பருவத்தில் தொழுகைக்கான நேரம் வந்து விட்டால் எங்களை பள்ளிக்கு சென்று ஜமாஅத்தாக தொழுவதற்காக கவனமூட்டி வந்தார்கள்.

பள்ளிக்குள் நாங்கள் தென்படவில்லை என்றால் எங்களைத்தேடுவார்கள். மேலும் அவர்களே எங்களை அழைத்துக் கொண்டு பள்ளிக்கு வருவார்கள். தொழுகையை ஒருபோதும் விடக்கூடாது. ஜமாஅத்தான தொழுகையுடன் சுன்னத்தும் தொழ வேண்டும் என்றும் எப்போதும் திருக்குர்ஆனை ஓத வேண்டும் என்றும் எப்போதும் எங்களுக்கு கூறி வந்தார்கள்.

அன்னாரது மகள் அத்யத்துல் அலீம் கூறுகின்றார்கள்: எங்களது தந்தை எப்போதும் உண்மையை பேசி வந்தார்கள். தமது குழந்தைகளிடம் ஒருபோதும் பொய் பேசியது கிடையாது. கேலிக்காகக் கூட பொய் பேசியது கிடையாது. தஹஜ்ஜுத் தொழுகையை ஒருபோதும் கைவிட்டது கிடையாது. பள்ளிக்கு சென்றே ஜமாஅத்தான தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தை தவிர வேறு எப்போதும் நான் அவர்களை வீட்டில் கடமையான தொழுகையை தொழுவதை பார்த்தது கிடையாது.

அவர்களது இரண்டாவது மனைவி கூறுகின்றார்கள்: அன்னார் என்னிடமும் குழந்தைகளிடமும் ரப்வா செல்வதற்கு முன்பாக கூறினார்கள். அதாவது எனது இந்த குடும்பம், எனது வீடு மேலும் எனது வாரிசு கிலாஃபத் ஆகும். எனது வாழ்க்கையும் மரணமும் ஜமாஅத்திற்காகவே ஆகும் என்று கூறினார்கள்.

மேலும் இந்த ஆண்டு ஜெர்மனி ஆண்டு மாநாட்டிற்கும் வந்திருந்தார்கள். அவர்களது பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டிருப்பதாக கூறிய பிறகும் கூட மிக்க மகிழ்ச்சியுடன் வந்திருந்தார்கள். அன்னார் நான் காலத்தின் கலீஃபாவை சந்திக்க செல்கிறேன் என்று கூறினார்கள். மேலும் என்னை சந்தித்தார்கள். ஜெர்மனியில் அவர்கள் என்னை சந்தித்ததுதான் என்னுடனான அவர்களது இறுதி சந்திப்பாகும்.

அவர்களது மனைவி கூறுகின்றார்கள்: சிறந்த கணவர் ஆவார்கள். கட்டுப்படுதலின் முக்கியத்துவத்தை நான் அவர்களிடமிருந்தே கற்றேன். ஜமாஅத் பணிகளுக்காக தமது உடல்நலத்தை கூட அவர்கள் கருத்தில் கொண்டது கிடையாது.

சயூத்தி அஸீஸ் சாஹிப் அவர்களின் மருமகன் கூறுகின்றார்கள்: **2005**–ஆம் ஆண்டு மக்கள் நமது பள்ளிவாசலின் மீது தாக்குதல் தொடுக்க இருக்கின்றனர் என்ற செய்தி கிடைத்தது. எனவே குத்தாம்கள் மேலிடத்தின் பாதுகாப்பிற்காக பள்ளிக்கு வருமாறு கட்டளையிடப்பட்டது. நானும் அங்கு சென்றிருந்தேன். சயூத்தி சாஹிப் தப்லீக் களத்தில் இருந்தார்கள். அன்னார் ஒருபோதும் அஞ்சியதை நான் பார்த்தது கிடையாது. மேலும் தைரியமாக நடுஇரவில் குத்தாம்களிடம் சென்று அவர்களை சந்தித்தார்கள். குத்தாம்களை தைரியமூட்டினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவர்கள் கிலாஃபத்தோடு எல்லைகடந்த அன்பு கொண்டிருப்பதைக் கண்டேன். நான் வாழ்க்கையை அர்ப்பணித்தவன் ஆவேன். நான் எதை செய்கின்றேனோ காலத்தின் கலீஃபாவின் அனுமதியுடன் செய்கின்றேன் என்று கூறி வந்தார்கள்.

2017–ஆம் ஆண்டு அன்னாருக்கு ஸ்ட்ரோக் ஏற்பட்டது. சிறிது காலம் தெளிவாக பேச முடியாத நிலையில் இருந்தார்கள். இருந்தபோதிலும், புத்தகத்தை தொடர்ச்சியாக வாசித்து வந்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு சென்று மாணவர்களுக்கு படித்துக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை எப்போதும் அன்னாரிடம் இருந்தது.

தர்பிய்யத் செயலர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: எவரிடமிருந்தாவது சிறந்த ஆலோசனையைப் பெற்றால் எவ்வித தயக்கமுமின்றி மிகவும் கண்ணியத்துடன் நன்றி கூறுவார்கள். பணிகளில் ஏதேனும் கஷ்டம் இருப்பின் கலப்பற்ற தன்மையுடன் ஆலோசனை கேட்பார்கள்.

அஹ்மது நூர் சாஹிப் முபல்லிக் எழுதுகின்றார்கள்: எப்போதும் எளிமையாக இருந்து வந்தார்கள். ஆனால் ஒழுக்கத்தை பேணி வந்தார்கள். வயது முதிர்ந்தவராக இருந்த போதிலும் ஜமாஅத் பணிகளை ஆர்வத்துடன் ஒரு இளைஞனைப் போன்று செய்து வந்தார்கள். அவர்கள் செய்த ஓர் அறிவுரை எப்போதும் எனக்கு நினைவில் இருக்கின்றது. அது என்னவென்றால், உங்களது முகத்தை அல்லாஹ்விடமிருந்து ஒருபோதும் திருப்பி விடாதீர்கள். அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். அவன் தனது அடியானின் மன்றாடுதலை ஒருபோதும் நிரகாரிப்பதில்லை என்று அறிவுரை செய்தளார்கள். ஷாஹிது வகுப்பிற்கான நேர்காணல் நடைபெற்றபோது அன்னார் அழுதவாறும், நடுங்கியவாறும் என்னிடம், இந்த வக்ஃபை ஒருபோதும் விட்டு விடாதீர்கள். எவர் இந்த வக்ஃபை விட்டு விடுவாரோ அவர் மிகப்பெரிய நஷ்டத்தை மேற்கொள்ளக்கூடியவராக இருப்பார் என்று கூறினார்கள்.

சயூத்தி சாஹிப் தொடர்பாக ஒருவர் கூறுகின்றார்: அன்னார் இந்த போதனையை வழங்கினார்கள். அதாவது ஒரு முரப்பிக்கு ஜமாஅத் அமைப்பை சரி செய்வதில் வெளிப்புற மற்றும் உட்புற பிரச்சனைகளை

எதிர்கொள்ள வேண்டியது வந்தால் அவர் எவ்வித அச்சமுமின்றி முன்னேற வேண்டும். மேலும் இறைவனது உதவி நிச்சயமாக நம்முடன் இருக்கும் என்று நம்பிக்கை வையுங்கள்.

ஆனால் தனிப்பட்ட குறைபாடுகளின் காரணமாக ஜமாஅத் மக்களின் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக வேண்டியது வந்தால் அதற்காக அவர் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். அதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். ஜமாஅத் பணிகளில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். நல்லெண்ணத்துடன் பணி செய்யுங்கள். ஆனால் தனிப்பட்ட தீமைகள் இருக்குமென்றால் நிச்சயமாக தம்மைத்தாமே ஆய்வு செய்யுங்கள் என்று அறிவுரை கூறி வந்தார்கள்.

காலித் அஹ்மது கான் சாஹிப் முபல்லிக் எழுதுகின்றார்கள்: ஜாமிஆவில் நாங்கள் படிக்கின்ற காலத்தில் சுயூத்தி சாஹிப் அவர்கள் ஆன்மீக மற்றும் நல்லொழுக்க ரீதியாக எங்களுக்கு ஒரு ஒளியூட்டக்கூடிய முன்மாதிரியாக இருந்தார்கள். அன்னார் தொழுகையை குறித்த நேரத்தில் ஜமாஅத்தாக தொழுவதை முறையாக பேணி வந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், சில நேரங்களில் ஜமாஅத்தான தொழுகைக்கு முன்பாகவே பள்ளியில் அமர்ந்திருப்பார்கள். மேலும் தனது கடைசி நாட்கள் வரை நோயுற்றிருந்த போதும் கூட தொழுகையில் எப்போதும் முன்னணியிலேயே இருந்தார்கள்.

முபல்லிக் ஹாஷிம் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: சுயூத்தி அஸீஸ் சாஹிப் அவர்களிடமிருந்து இல்முல் கலாம் படிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. படித்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே மாணவர்களிடம் கேள்வி கேட்பது அன்னாரது பழக்கமாக இருந்தது. மாணவர்கள் வழங்குகின்ற பதிலுக்கு மிகவும் பாராட்டுவார்கள். ஒருமுறை அன்னார் எங்களிடம், ஜமாஅத்தின் உண்மைத்துவத்திற்கான மிகப்பெரிய ஆதாரம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனமாக எடுத்துக் கூறினோம். மேலும் நபிமொழிகளின் ஆதாரங்களின் அடிப்படையில் அதற்கு பதில் கூறினோம். ஆனால் அவர்கள் எங்களது பதிலை கேட்டு விட்டு, உண்மைக்கான மிகப்பெரிய ஆதாரம் நான் ஆவேன் என்று கூறினார்கள். அதாவது ஒவ்வொரு அஹ்மதியும் தம்மைத்தாமே உண்மைத்துவத்திற்கான ஆதாரமாக கருத வேண்டும்.

மேலும் அன்னார் எங்களிடம், நீங்கள் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே ஜமாஅத்தின் உண்மைக்கு ஓர் ஆதாரமாக எடுத்துக்கூறும் அளவிற்கு உங்களையே தகுதியானவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று கூறி வந்தார்கள். மேலும் நீங்கள் முழுமையான முறையில் அஹ்மதிய்யத்தின் அதாவது உண்மை இஸ்லாத்தின் படி செயல்படுவீர்கள் என்றால் பிறகு நீங்கள்தான் இந்த அமைப்பின் உண்மைத்துவத்திற்கு மிகப்பெரிய ஆதாரம் ஆவீர்கள் என்று கூறினார்கள். இதுதான் அன்னார் செய்த தர்பிய்யத்தின் வழிமுறையாகும்.

குத்பாக்களை மிகவும் கவனமாக கேட்பார்கள். எனது குத்பாவிலிருந்து குறிப்பு எடுத்து மாணவர்களிடம் கலந்துரையாடுவார்கள். மேலும் அவர்கள் குறிப்பு எடுத்தார்களா என்பதை உறுதி செய்து கொள்வார்கள். காலத்தின் கலீஃபாவின் தூதுச் செய்தியை அனைவரும் புரிந்தார்களா? இல்லையா? என்பதை எப்போதும் கண்காணித்து வந்தார்கள். கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு எப்போதும் அறிவுரை கூறி வந்தார்கள்.

முபல்லிக் ஷம்ஸூரி மஹ்மூது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: சுயூத்தி சாஹிப் வெற்றிகரமான ஒரு முபல்லிக் ஆவார்கள். வாழ்க்கையை அர்ப்பணித்த பிறகு ஒருபோதும் கவனமற்றவர்களாக இருக்கக்கூடாது. வக்ஃபிலிருந்து வெளியேறுவது தம்மைத்தாமே ஜமாஅத்திலிருந்து வெளியேற்றுவதற்கு சமமாகும். இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். என்று அன்னார் ஒரு முறை என்னிடம் அறிவுரை கூறினார்கள். அன்னார் இந்த விஷயத்தை கூறியபோது அன்னாரது கண்கள் சிவந்து விட்டது. மேலும் அன்னாரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

முபல்லிக் யூசுஃப் இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னார் என்னை ரீஜினல் முபல்லிக்காக ஆக்கியபோது அன்னாரை சந்திக்கச் சென்றேன். யூசுஃப் சாஹிப் அன்னாரிடம், என்னை ஏன் ரீஜினல் முபல்லிக்காக தேர்ந்தெடுத்தீர்கள்? ஏனென்றால் என்னிடம் பல பலவீனங்கள் இருக்கின்றன. மேலும் எனக்கு அனுபவமும் குறைவுதான் என்று கூறினேன். நான் ரீஜினல் முபல்லிக்கு தகுதியானவன் அல்ல. என்னை விட அதிக தகுதியுடைய பலர் இருக்கின்றனர். அவர்களை ஆக்குங்கள் என்று கூறினேன்.

இந்த கேள்விக்கு அன்னார் பதில் கூறும்போது, மிகுந்த பணிவுடனும் நேரடியாகவும் என்னிடம், நீங்கள் தகுதியானவர்கள் என்று யார் கூறினார்? உங்களை ரீஜினல் முபல்லிக்காகவும், இந்த பொறுப்பை உங்களுக்கு கொடுத்ததன் காரணமும் என்னவென்றால், நீங்கள் இதை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். மேலும் இந்த பொறுப்பின் உணர்வு உங்களிடம் ஏற்பட வேண்டும் என்பதால்தான் இது வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார்க.

மேலும் அன்னார் கூறினார்கள்: நாம் பலவீனமான அடியார்கள் ஆவோம். நம்மால் எதுவும் செய்ய இயலாது. ஆனால் அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பு இருக்குமென்றால் பிறகு எல்லா விவகாரங்களிலும் எளிதான நிலை உருவாகி விடும். ஆகவே இந்த விஷயத்தை எப்போதும் சிந்தனையில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ரீஜினல் முபல்லிக்காக இருந்தாலும் சரி; சாதாரண முபல்லிக்காக இருந்தாலும் சரி அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அப்போதுதான் உங்களுக்கு வெற்றிகள் கிடைக்கும். எளிதான நிலை உருவாகும் என்று கூறினார்கள்.

M.T.A வின் ஜெனரல் செகரட்டரி அன்வர் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒரு கஷ்டமான நிலையில் நான் ஒருமுறை அன்னாருக்கு துஆவிற்கான செய்தியை அனுப்பினேன். ஆனால் எவ்வித பதிலும் வரவில்லை. பிறகு ஒருவரிடமிருந்து அன்னாரது Mobile நம்பரை பெற்றேன்.

அடுத்த நாள் நான் அன்னாரை சந்தித்தேன். அன்னார் என்னை சந்தித்த உடன் முதல் கேள்வியே என்னவென்றால், உங்களது கஷ்டத்தைப் பற்றி எனக்கு எழுதியுள்ளீர்கள். காலத்தின் கலீஃபாவிற்கு எழுதினீர்களா? என்பதாகவே இருந்தது. நான் துஆவிற்காக எழுதினேன் என்று கூறியதும் அன்னார் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் இந்த வழிமுறையை பேணி நடக்க வேண்டும் என்று கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அன்னாரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. அன்னார் இதை எடுத்துக்கூறிய விதம் அன்னாருக்கு கிலாஃபத் மீதிருந்த ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்தக்கூடியதாக இருந்தது.

இவ்வாறே எப்போதெல்லாம் கிலாஃபத் பற்றி எடுத்துக் கூறப்படுமோ அன்னார் உணர்வுப்பூர்வமாக ஆகி விடுவார்கள். மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னார் பாகிஸ்தானிலுள்ள ரப்வாவில் வஃபாத் ஆனார்கள். அன்னாரது உடல் 23 நவம்பர் அன்று இந்தோனேஷியா கொண்டு வரப்பட்டது. 24 நவம்பர் அன்று பாரூனில் வஸிய்யத் செய்தவர்களுக்கான கபருஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். ஜமாஅத் மக்கள் அதிக அளவில் அன்னாரது ஜனாஸாவில் கலந்து கொண்டார்கள்.

அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் உயர்ந்த இடத்தை வழங்குவானாக. அவர்களது குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக. மேலும் அவர்களது சந்ததிகளுக்கும் அவர்களது அடிச்சுவட்டில் நடப்பதற்குரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக. தொழுகைக்குப் பிறகு அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன்.


**திருக்குர்ஆனிலிருந்து....**

நிராகரித்தவர்களை நீர் எச்சரிக்கை செய்வதும் எச்சரிக்கை செய்யாதிருப்பதும் ஒன்றே. அவர்கள் (தம் நிலையை மாற்றிக் கொள்ளாதவரை) நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். (2:7)

**ஃபைஸல் ஹமீது இலாஹி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

# ஜுமுஆ பேருரை

**முடிவு சிறந்ததாக இருப்பதற்கு எப்போதும் துஆ கேட்க வேண்டும்**

**கலப்பற்ற தன்மையிலும், கட்டுப்படுதலிலும் மிக உயர் தகுதியைப் பெற்றிருந்த பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களான ஹஸ்ரத் உபைது பின் ஸைது அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் ஸாஹிர் பின் ஹராம் அஷ்ஜஈ (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் கிதாப் (ரலி), ஹஸ்ரத் உபாதா பின் ஹஷ்ஹாஷ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஐத் (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அவ்ஸ் பின் மஆஸ் (ரலி) ஆகியோரின் வாழ்க்கையிலிருந்து அருளுக்குரிய நற்குறிப்புகள்**

**இஸ்லாமிய அரசாங்கத்திற்கு எதிராக உடன்படிக்கையை மீறுதல், போருக்கான திட்டமிடுதல், குழப்பம் விளைவித்தல், தகாத வார்த்தைகளைப் பேசுதல் போன்ற செயல்களுக்காக யூதர்களின் தலைவன் கஅப் பின் அஷ்ரஃப் கொல்லப்பட்டது தொடர்பான குறிப்பு மற்றும் ஆட்சேபனை செய்பவர்களின் ஆட்சேபனைக்குப் பதில்கள்**

**அல்லாஹ் எப்போதும் இந்த குழப்பத்திலிருந்து இஸ்லாத்தை பாதுகாப்பானாக. மேலும் இந்த காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்ட வழிகாட்டியை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 07 டிசம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **07 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபாக்களில் முதலாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உபைது பின் ஸைது அன்ஸாரி ஆகும். இவர்கள் அஜ்லான் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாவார்கள். பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 448 உபைது பின் ஸைது (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஆஸ் பின் ரிஃபா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்: நானும் எனது சகோதரரான ஹஸ்ரத் ஹல்லாது பின் ராஃபியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஓர் ஒட்டகத்தில் பயணம் செய்து பத்ரை நோக்கி சென்றோம். எங்களுடன் உபைது பின் ஸைது அவர்களும் இருந்தார்கள். நாங்கள் பரீது என்ற இடத்தை அடைந்தோம். அது ரவ்ஹா என்ற இடத்திற்கு பின்னால் இருக்கின்றது. அப்போது எங்களது ஒட்டகம் அமர்ந்து விட்டது.

இதற்கு முன் வேறொரு சஹாபியைப் பற்றி நான் எடுத்துக் கூறிய சம்பவத்தில் இது பற்றி சிறிது எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது ஒட்டகம் அமர்ந்து விட்டது. நாங்கள் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்தோம். அதாவது அல்லாஹ்வே! நாங்கள் உன்னிடம் காணிக்கையாக இதை வேண்டுகின்றோம். நாங்கள் மதீனா சென்றடைந்து விட்டால் இந்த ஒட்டகத்தை குர்பானி கொடுத்து விடுவோம்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் இதே நிலையில் இருந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களை கடந்து சென்றார்கள். உங்கள் இருவருக்கும் என்னவாயிற்று என்று பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களிடத்தில் கேட்டார்கள். நாங்கள் முழு சம்பவத்தையும் கூறினோம். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களுடனே இருந்தார்கள். அன்னார் உளூ செய்தார்கள்.

எஞ்சியிருந்த தண்ணீரின் தனது உமிழ் நீரை இட்டார்கள். பிறகு அன்னாரது கட்டளையினால் நாங்கள் ஒட்டகத்தின் வாயை திறந்தோம். அன்னார் ஒட்டகத்தின் வாயில் சிறிதளவு தண்ணீரை ஊற்றினார்கள். பிறகு அதன் தலையிலும், அதன் கழுத்திலும், அதன் தோள்பட்டையிலும், அதன் முதுகிலும் மேலும் சிறிதளவு தண்ணீரை ஒட்டகத்தின் வாலிலும் ஊற்றினார்கள்.

பிறகு அன்னார் துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! ராஃபியையும் ஹல்லாதையும் இதில் சவாரி செய்து கொண்டு செல்வாயாக.

அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சென்று விட்டார்கள். நாங்களும் செல்வதற்காக எழுந்து நின்றோம். செல்ல ஆரம்பித்தோம். எதுவரையென்றால் நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களை முன்ஸிஃப் என்ற இடத்தின் ஆரம்பப் பகுதியிலேயே கண்டோம். எங்களது ஒட்டகம் பயணக் குழுவிற்கு முன்பாக சென்று கொண்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களை எங்களைக் கண்டு புன்சிரித்தார்கள். நாங்கள் சென்று கொண்டே இருந்தோம். எதுவரை என்றால் நாங்கள் பத்ர் மைதானத்தை அடைந்தோம்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பத்ரிலிருந்து திரும்பியபோது எங்களது ஒட்டகம் முஸல்லா என்ற இடத்தை அடைந்ததும் அமர்ந்து விட்டது. பிறகு எனது சகோதரர் அந்த ஒட்டகத்தை அறுத்து அதன் கறியை சதகா கொடுத்து விட்டோம். இவர்களுடன் உபைது பின் ஸைதும் இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 181 மஆஸ் பின் ரஃபாஆ (ரலி) – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அம்தாவுல் அஸ்மா தொகுதி 1 பக்கம் 181 மஆஸ் பின் ரஃபாஆ (ரலி) – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & கிதாபுல் மகாஸி லில்வாக்தி தொகுதி 1 பக்கம் 39 பத்ருல் கிதால் – 2013–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் ஸாஹிர் பின் ஹராம் அல் அஷ்ஜயி ஒரு சஹாபி ஆவார்கள். பத்ர் போர் சஹாபி ஆவார். அன்னார் அஷ்ஜஆ கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். பத்ர் போரில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: கிராமப் புறங்களில் வசிக்கக் கூடியவர்களில் ஒருவரது பெயர் ஸாஹிர் ஆகும். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக கிராமத்திலிருந்து பொருட்களை தன்னுடன் கொண்டு வருவார்கள். அவர்கள் திரும்பிச் செல்லும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அதிகமான செல்வங்களையும், பொருட்களையும் கொடுத்து அனுப்புவார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள்: ஸாஹிர் கிராமப் புறத்தைச் சார்ந்த நமது நண்பராவார்கள். மேலும் நாம் இவரது நகர்புற நண்பர்கள் ஆவோம்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்கள் மீது அன்பு வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் ஸாஹிர் அவர்கள் சாதாரண தோற்றத்தைக் கொண்ட நபராவார். ஒரு நாள் ஹஸ்ரத் ஸாஹிர் அவர்கள் கடை வீதியில் தமக்காக சில பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவரிடத்தில் வருகை தந்தார்கள். மேலும் பின்னால் இருந்தவாறு தமது நெஞ்சோடு அவரை அணைத்துக் கொண்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் பின்புறமாக வந்தவாறு அவரது கண்களில் தமது கரங்களை வைத்தார்கள். ஹஸ்ரத் ஸாஹிர் அவர்களால் பெருமானார் (ஸல்) அவர்களை பார்க்க முடியவில்லை. நீங்கள் யார்? என்னை விட்டுவிடுங்கள் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் அன்னார் சற்று திரும்பி பார்த்ததும் பெருமானார் (ஸல்) அவர்களை அடையாளங்கண்டு கொண்டார்கள்.

அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள்தான் என்பதை அறிந்து கொண்டார்கள். பிறகு தமது முதுகுப் பகுதியினால் பெருமானார் (ஸல்) அவர்களது அருளுக்குரிய நெஞ்சுப் பகுதியில் தேய்க்கத் தொடங்கினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் யார் இந்த அடிமையை வாங்குவார்கள் என்று கூறினார்கள். அதற்கு ஸாஹிர் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னை யார் வாங்குவார்? என்னை வாங்குபவர் இழப்பிற்குரிய வியாபாரத்தை செய்யக்கூடியவராக இருப்பார் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் பார்வையில் நீர் இழப்பிற்குரிய வியாபாரப் பொருளல்ல. மாறாக, அல்லாஹ்விடத்தில் நீங்கள் அதிக மதிப்பிற்குரியவராவீர்கள் என்று கூறினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 98 & அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 509 ஸாஹிர் பின் ஹராம் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அஷ்ஷுமாயிலுல் முஹம்மதிய்யா லித்திர்மிதி பக்கம் 143 பாப் மாஜாஅ ஸஃபத.... பைரூத்திலுள்ள அஹ்யாவுத் தராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் பெருமானார் (ஸல்) அவர்களது இந்த சம்பவத்தை ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் கடைவீதியில் சென்று கொண்டிருந்தபோது அன்னார் ஒரு ஏழை சஹாபியை பார்த்தார்கள். அவர் பார்ப்பதற்கு அழகாக இருக்கவில்லை. அவர்கள் கடுமையான வெளியில் பொருட்களை தூக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களது முழு உடலும் மண்ணினாலும், வியர்வையினால் நிறைந்திருந்தது. எவ்வாறு விளையாடும்போது குழந்தைகள் மவுனமாக பின்னால் சென்றவாறு மற்றொரு குழந்தையின் கண்களை மூடியவாறு கண்களை மூடியது யார் என்று கண்டுபிடியுங்கள் என்று கேட்குமோ அவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்களும் மவுனமாக அவருக்குப் பின்னால் சென்று அவரது கண்களில் தமது கரங்களை வைத்தார்கள்.

அவர் அன்னாரது மென்மையான கரங்களை தொட்டுப் பார்த்து இது பெருமானார் (ஸல்) அவர்கள்தான் என்பதை புரிந்து கொண்டவாறு வியர்வை நிறைந்த தமது உடலை பெருமானார் (ஸல்) அவர்களது ஆடையில் தேய்க்கத் தொடங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் புன்சிரித்ததவாறே இருந்தார்கள்.

இறுதியில் அன்னார் (ஸல்) அவர்கள், என்னிடத்தில் ஓர் அடிமை இருக்கின்றார். இவரை வாங்குபவர் எவரும் இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உலகத்தில் என்னை யார் வாங்குவார் என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவ்வாறு கூறாதீர்கள். இறைவனிடத்தில் உமக்கு மிகப் பெரிய வெகுமதி இருக்கின்றது என்று கூறினார்கள்.

(சேரே ரூஹானீ பக்கம் 489 – 2005–ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

ஆக, இம்மக்கள் வியக்கத்தக்க அன்பின் அருளைப் பெற்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: நகர்ப்புறத்தைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் கிராமப்புறத்தைச் சார்ந்த எவருடனாவது தொடர்பு இருக்கும். மேலும் முஹம்மதின் குடும்பத்தின் கிராமப்புற தொடர்பானது ஸாஹிர் பின் ஹராமுடன் ஆகும். ஸாஹிர் பின் ஹராம் அவர்கள் பின்நாட்களில் கூஃபா இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 509 ஸாஹிர் பின் ஹராம் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் ஆவார். ஹஸ்ரத் உமர் அவர்களின் மூத்த சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாகவே அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் ஆரம்பத்தில் ஹிஜ்ரத் செய்தவர்களில் ஒருவராகவும் இருந்தார்கள். பத்ர், உஹது, அகழ் போர்களிலும், ஹுதைபிய்யா மற்றும் பைஅத்தே ரிஸ்வானிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாருக்கும் ஹஸ்ரத் மஆன் பின் அதீ அவர்களுக்கும் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இந்த இரண்டு சஹாபாக்களும் யமாமா போரில் ஷஹீதானார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 288 ஸைது பின் அல்கிதாப் (ரலி)– 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 550 ஸைது பின் அல்கிதாப் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

உஹது போரின் நாளன்று ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களிடம் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் மூத்த சகோதரர் ஆவார்கள். அவர்களிடம் எனது போர் கவசத்தை அணிந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸைது அவர்கள் சிறிது நேரம் அதை அணிந்து விட்டு போர் நேரத்தில் அதை கழற்றி விட்டார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் போர் கவசத்தை கழற்றியதற்கான காரணத்தைக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஸைது அவர்கள், நீங்கள் எதனை விரும்புகின்றீர்களோ நானும் அந்த ஷஹாதத்தை அடையவே விரும்புகின்றேன் என்று கூறினார்கள். பிறகு இருவரும் போர் கவசத்தை அணியாமல் விட்டுவிட்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 289 ஸைது பின் அல்கிதாப் (ரலி)– 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களது அடிமைகளை கருத்தில் கொள்ளுங்கள். உங்களது அடிமைகளை கருத்தில் கொள்ளுங்கள். நீங்கள் உண்ணுபவற்றிலிருந்து அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் அணிபவற்றையே அவர்களுக்கும் அணியக் கொடுங்கள். அவர்களிடம் ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டால், நீங்கள் அவர்களை மன்னிக்க விரும்பவில்லை என்றால் அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் அவர்களை விற்று விடுங்கள். அவர்களுக்கு தண்டனை வழங்காதீர்கள்.

யமாமா போரில் முஸ்லிம்களின் கால்கள் தடுமாற்றம் அடைந்தபோது ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் அவர்கள் உரத்த குரலில், அல்லாஹ்வே! நான் உன்னிடம் எனது தோழர்கள் ஓடிச் சென்று விட்டதற்காக மன்னிப்புக் கோருகின்றேன். முஸைலமா கத்தாப் மற்றும் மஹ்கம் பின் துஃபைல் செய்த பணிகளை விட்டு நான் விலகி நிற்கின்றேன்.

பிறகு அன்னார் கொடியை வலுவாக பற்றிப் பிடித்தவாறு எதிரிகளின் படையை முந்திச் சென்றவாறு தனது வாளின் மூலமாக ஆற்றலை வெளிப்படுத்தினார்கள். எதுவரை என்றால் அன்னார் ஷஹீதானார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 288 ஸைது பின் அல்கிதாப் (ரலி)– 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது ஷஹீதானபோது ஹஸ்ரத் உமர் அவர்கள், அல்லாஹ் ஸைதின் மீது கருணை காட்டுவானாக. எனது சகோதரர் இரண்டு நன்மைகளில் என்னை விட முந்திச் சென்று விட்டார் என்று கூறினார்கள். அதாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதிலும் எனக்கு முன்பாக அவர் இஸ்லாத்தை தழுவினார். மேலும் எனக்கு முன்பாகவே ஷஹீதும் ஆனார்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா லா பின் ஹிஜ்ர் அஸ்கலானி தொகுதி 4 பக்கம் 500 ஸிக்ர் ஸைது பின் அல்கிதாப்)

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் உமர் அவர்கள் முதம்மின் பின் நுவேராவின் சகோதரர் மரணித்தபோது தமது சகோதரரான மாலிக் பின் நவேரானின் நினைவாகக் கவிதைகள் கூறுவதைக் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், எனக்கும் உம்மைப் போன்று இவ்வாறு கவிதை

படிக்க தெரிந்திருந்தால் நீர் கவிதை கூறியது போன்று நானும் எனது சகோதரரான ஸைதின் நினைவாக கவிதைகள் கூறியிருப்பேன் என்று கூறினார்கள். அதற்கு முதம்மின் பின் நுவேரா, உமது சகோதரர் இவ்வுலகை விட்டுச் சென்றது போல் எனது சகோதரர் சென்றிருந்தால் நான் ஒருபோதும் கவலைப்பட்டிருக்கமாட்டேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள், இன்று வரை எவரும் நீர் கூறியதைப் போன்று என்னிடம் கூறியது கிடையாது என்று கூறினார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 553 ஸைது பின் அல்கிதாப் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தைப் பற்றி இன்னும் விளக்கமாக ஓர் அறிவிப்பில் கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் முதம்மின் பின் நுவேராவிடம், உமது சகோதரனைக் குறித்து உமக்கு எந்த அளவுக்கு துக்கம் இருக்கின்றது என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் தமது கண்களின் பக்கம் சைகை செய்தவாறு, எனது இந்த கண்கள் இந்த கவலையினாலேயே வீணாகி விட்டன. நான் நன்றாக இருந்த எனது கண்களால் எந்த அளவு அழுதேன் என்றால் வீணாகிப் போன எனது கண்களும் கூட கண்ணீர் வடிப்பதில் அதற்கு உதவி செய்தன என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், இது எப்படிப்பட்ட கவலை என்றால், எவரோ ஒருவர் அழியக்கூடிய ஒருவருக்காக இப்படிப்பட்ட கவலையை ஒருபோதும் வெளிப்படுத்தியிருக்க மாட்டார் என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள், அல்லாஹ் ஸைது பின் கத்தாபின் மீது கருணை காட்டுவானாக. நான் கவிதை கூற ஆற்றல் பெற்றவனாக இருந்திருந்தால் எவ்வாறு நீங்கள் உங்களது சகோதரருக்காக அழுகின்றீர்களோ அவ்வாறு நிச்சயமாக ஸைதிற்காகவும் நான் அழுதிருப்பேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முதம்மிம் அவர்கள், அமீருல் முஃமினீன் அவர்களே! எனது சகோதரர் யமாமா போரில் உங்களது சகோதரரைப் போன்று ஷஹீதாகி இருந்தால் நான் ஒருபோதும் அழ மாட்டேன் என்று கூறினார்கள். இந்த கூற்று ஹஸ்ரத் உமர் அவர்களது உள்ளத்தை தொட்டது. தனது சகோதரர் தொடர்பாக அன்னாருக்கு மனநிறைவு ஏற்பட்டது. ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு தமது சகோதரரின் பிரிவினால் மிகுந்த துக்கம் இருந்தது.

அன்னார், தென்றல் காற்று வீசும் போது அது என்னிடம் ஸைதின் நறுமணத்தை கொண்டு வந்து சேர்த்தது என்று கூறினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 289 ஸைது பின் அல்கிதாப் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

முஸைலமா கத்தாபின் உடன் இருந்தவர்களில் ரஜ்ஜால் பின் உன்ஃபுவா என்பவன் ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் அவர்களின் கைகளினால் கொல்லப்பட்டான்.

ஓர் அறிவிப்பில், ரஜ்ஜால் பின் உன்ஃபுவாவின் பெயர் நஹார் என்று வந்துள்ளது. இவர் யார் என்றால், இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஹிஜ்ரத்தும் செய்தார். திருக்குர்ஆனுக்கு காரியாகவும் இருந்தார். ஆனால் பிறகு முஸைலமாவுடன் இணைந்து விட்டார். எனவே எப்போதும் நமது முடிவு சிறந்ததாக இருப்பதற்கு துஆ செய்ய வேண்டும். அவர் கூறினார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது நபித்துவ வாதத்தில் உங்களையும் சேர்த்துக் கொண்டார்களாமே என்று நான் கேள்விப்பட்டேன். இது பனூ ஹஃபீபாவிற்கு மிகப்பெரிய குழப்பமாக இருந்தது.

ஹஸ்ரத் அபூஹுரைரா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒரு குழுவுடன் அமர்ந்திருந்தேன் எங்களுடன் ரஜ்ஜால் பின் உன்ஃபுவாவும் இருந்தான். அன்னார் கூறினார்கள்: உங்களில் ஒருவர் இருக்கின்றார். அவர் நெருப்பில் இருப்பார். அவர் ஒரு சமுதாயத்தை வழிகெடுப்பார் என்று கூறினார்கள். பிறகு நானும் ரஜ்ஜால் பின் உன்ஃபுவா எஞ்சியிருந்தோம். நான் எப்போதும் இதுதொடர்பாக அஞ்சினேன். எதுவரை என்றால் ரஜ்ஜால் பின் உன்ஃபா முஸைலமா கத்தாபுடன் வெளியேறினான். மேலும் அவன் அவனது நபித்துவத்திற்கு சாட்சி பகர்ந்தான். இந்த ரஜ்ஜால் பின் உன்ஃபா யமாமா போரில் கொல்லப்பட்டான். ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் அவர்கள் அவனைக் கொன்றார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 551–552 ஸைது பின் அல்கிதாப் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் அவர்களை அபூ மர்யம் அல்ஹன்ஃபி என்பவன் ஷஹீதாக்கினான். ஒருமுறை ஹஸ்ரத் உமர் அவர்கள் அபூ மர்யம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு கூறினார்கள்: நீங்கள்தான் ஸைதை ஷஹீதாக்கினீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் உமர் அவர்களிடம், அமீருல் முஃமினீன் அவர்களே! அல்லாஹ் ஹஸ்ரத் ஸைது அவர்களுக்கு என் கைகளின் மூலமாக கண்ணித்தை வழங்கியுள்ளான். எனது கைகளினால் அவரை இழிவடையச் செய்யவில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் அபூ மர்யமிடம், உமது எண்ணத்தின்படி யமாமா போரில் உங்களைச் சார்ந்த எத்தனை நபர்களை முஸ்லிம்கள் கொலை செய்திருப்பார்கள் என்று கேட்டார்கள். அதற்கு அபூமர்யம், 1400 நபர்களை அல்லது அதை விட அதிகமாக என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள், கொல்லப்பட்டவர்கள் எவ்வளவு தீயவர்களாக இருக்கின்றனர் என்று கூறினார்கள்.

அபூமர்யம் அவர்கள், அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். அவன் என்னை எஞ்சியிருக்கச் செய்துள்ளான். எதுவரையென்றால் அவனது நபிக்காகவும், முஸ்லிம்களுக்காகவும் அவன் விரும்பிய மார்க்கத்தின் பக்கம் என்னை குனியச் செய்தான் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் அபூமர்யமின் இந்த கூற்றினால் மகிழ்ச்சியடைந்தார்கள். அபூமர்யம் அவர்கள் பிற்காலத்தில் பஸ்ராவின் காஸியாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 121 ஸிக்ர் ஸைது பின் அல்கிதாப் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 288–299 ஸைது பின் அல்கிதாப் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உபாதா பின் ஹஷ்ஹாஷ் ஆவார்கள். வாக்தீ அவர்கள், ஹஸ்ரத் உபாதா பின் ஹஷ்ஹாஷ் அவர்களின் பெயரை அப்தா பின் ஹஸாஸ் என்று கூறியுள்ளார்கள். இப்னு மன்தா அவர்கள் அன்னாரின் பெயரை உபாதா பின் ஹஷ்ஹாஷ் அன்பரி என்று கூறியுள்ளார்கள்.

எவ்வாறிருப்பினும் இவர்கள் பலீஃ கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் மஹ்ஸர் பின் ஸியாது அவர்களின் சகோதரனின் மகனாவார்கள். இவர்களது தாயார் தரப்பிலிருந்தும் இவர்கள் சகோதரர் ஆவார்கள். பனூ சாலமின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவராவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 53 உபாதா பின் ஹஷ்ஹாஷ் (ரலி)

ஹஸ்ரத் உபாதா பின் ஹஷ்ஹாஷ் அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். அன்னார் கைஸ் பின் ஸாயிபை பத்ர் போரில் கைது செய்தார்கள். ஹஸ்ரத் உபாதா பின் ஹஷ்ஹாஷ் உஹது போரில் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் மற்றும் ஹஸ்ரத் முஜஸ்ஸிர் பின் ஸியாது ஆகியோருடன் அன்னாரும் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 157 உபாதா பின் அல்ஹஷ்ஹாஷ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 513 அப்தா பின் ஹஸ்ஹாஸ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜத் ஆகும். அன்னாரது தந்தையின் பெயர் ஜத் பின் கைஸ் ஆகும். அன்னாரது சுட்டுப் பெயர் அபூ வஹப் ஆகும். அன்ஸாரிகளின் ஒரு கோத்திரமான பனூ சலமா கோத்திரத்தைச் சார்ந்தவர்களாவார்கள். ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் தனது தாயின் தரப்பிலிருந்தும் அன்னாருடைய சகோதரர் ஆவார். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜத் அவர்கள் பத்ர் போரிலும், உஹது போரிலும் பங்கு பெற்றார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 430 அப்துல்லாஹ் பின் ஜத் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல்

இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 196 அப்துல்லாஹ் பின் ஜத் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

தபூக் போரின் சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜத் அவர்களின் தந்தையிடம், அபூவஹபே! நீர் இவ்வருடம் எங்களுடன் போருக்காக செல்வீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அபூவஹப், நீங்கள் எனக்கு அனுமதி தாருங்கள். குழப்பத்தில் என்னை ஈடுபடுத்தாதீர்கள். என்னால் செல்ல முடியாது என்று கூறினார்.

அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு வியக்கத்தக்க சாக்குப்போக்கை எடுத்துக் கூறினார்.

அவர் கூறுகின்றார்: எனது சமுதாயத்திற்கு தெரியும். அதாவது நான் பெண்கள் மீது மிகுந்த அனுதாபம் கொண்டவனாவேன். நான் பனூ சஃப்ராவின் பெண்களைப் பார்த்தால் என்னால் என்னையே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது என்று கூறினார். பெருமானார் (ஸல்) அவரை புறந்தள்ளியவாறு அவருக்கு அனுமதி வழங்கினார்கள். சரி. சாக்குப் போக்குகளை கூறுகின்றீர்கள். செல்ல வேண்டாம் என்று விடுப்பு வழங்கினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜத் அவர்களுக்கு இது தொடர்பாக தெரிய வந்தபோது தனது தந்தையிடம் வந்தார்கள். தனது தந்தையிடம், நீங்கள் ஏன் பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றை நிராகரித்து விட்டீர்கள்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் பனூ சலமாவைச் சார்ந்தவர்களில் மிகப் பெரிய செல்வம் படைத்தவர்களாவீர்கள். இன்று இதில் பங்கு பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நீங்களும் போருக்காக செல்வதில்லை. மேலும் எவருக்கும் சவாரிக்கான ஏற்பாட்டையும் செய்து தருவதில்லை என்று கூறினார்கள்.

அதற்கு அவர்களுடைய தந்தை தனது மகனுக்கு முன்னால் இன்னொரு சாக்குப் போக்கை எடுத்துக் கூறுகின்றார். அதுவே உண்மையும் கூட. அவர் கூறுகின்றார்: எனது மகனே! நான் ஏன் இந்த வெயிலில், கோடைகாலத்தில் பனூ சஃப்ராவை நோக்கி செல்ல வேண்டும். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஹர்பாவில் இருக்கக்கூடிய எனது வீட்டிலும் கூட அவர்களது அச்சத்தின் காரணமாக நான் பாதுகாப்பாக இருப்பதாக என்னை நான் உணரவில்லை என்று கூறினார்.

(ஹர்பா என்பது பனூ சலமாவின் வீடு இருந்த இடமாகும்). ரோமானியர்களைக் குறித்து மிகுந்த அச்சம் இவரிடம் இருந்தது. இவர் கோழை மனிதராவார்)

அவர் கூறுகின்றார்: நான் அவர்களுக்கு எதிராக செல்ல வேண்டுமா? மேலும் அவர்களுக்கு எதிராக போரில் கலந்து கொள்ள வேண்டுமா என்ன? மகனே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இக்கட்டான அந்த காலத்தைப் பற்றி நன்கு அறிந்தவனாக இருக்கின்றேன். என்ன நிலை ஏற்படும் என்று எனக்குத் தெரியும்.

அவரது இந்த கூற்றைக் கேட்டு ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள், தந்தையிடம் கடினமாக நடந்து கொண்டார்கள். மேலும், உங்களிடம் நயவஞ்சகத்தன்மை இருக்கின்றது. அல்லாஹ் உங்களைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆனில் அருளுவான். அதை அனைவரும் படிப்பார்கள். மேலும் அல்லாஹ் நீங்கள் நயவஞ்சகர்களைச் சார்ந்தவராவீர்கள் என்பதை வெளிப்படுத்தி விடுவான் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தை தமது காலணிகளினால் அவர்களது முகத்தில் அடித்தார்கள். பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள். தனது தந்தையிடம் அவர்கள் பேசவில்லை.

(கிதாபுல் மகாஸி லில்வாக்தி தொகுதி 2 பக்கம் 381 கஸ்வா தபூக் – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அஸதுல் காபாவில் எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தந்தை ஜத் பின் கைஸ் ஆவார்கள். அவர்களிடம் நயவஞ்சகத்தன்மை இருப்பதாக கருதப்பட்டது. இவர் ஹுதைபியாவில் கலந்து கொண்டார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் பைஅத் வாங்கியபோது இவர் பைஅத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் பின்நாட்களில் இவர் தவ்பா செய்து விட்டார் என்றும், இவர்களது மரணம் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 521 ஜத் பின் கைஸ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹாரிஸ் பின் அவ்ஸ் பின் மஆஸ் ஆவார்கள். அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் ஹஸ்ரத் ஸஅது பின் மஆஸ் அவர்களின் சகோதரரின் மகன் ஆவார்கள். பத்ர் போரிலும், உஹது போரிலும் பங்கு பெற்றார்கள்.

இவர்கள் தொடர்பாக இவ்வாறு கூறப்படுகிறது: 28–வது வயதில் அன்னார் உஹது போரில் ஷஹீதானார்கள். ஆனால் மற்றொரு அறிவிப்பிலிருந்து, அன்னார் உஹது போரில் ஷஹீதாகவில்லை என்று தெரிய வருகிறது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உஹது போரின் சந்தர்ப்பத்தில் மக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவாறு சென்றேன். நான் எனக்குப் பின்னால் காலடி ஓசையைக் கேட்டேன். திரும்பிப் பார்த்தேன். அப்போது ஹஸ்ரத் ஸஅது பின் மஆஸ் அவர்கள் இருந்தார்கள். அன்னாரது சகோதரரின் மகனான ஹாரிஸ் பின் அவ்ஸும் உடன் இருந்தார். அவர் கேடயத்தை வைத்திருந்தார்.

இந்த அறிவிப்பிலிருந்து இவர்கள் உஹது போருக்கு பிறகும் உயிருடன் இருந்தார்கள் என்று தெரிய வருகின்றது.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 589 ஹாரிஸ் பின் அவ்ஸ் பின் மஆஸ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 256 ஹதீஸ் ஆயிஷா (ரலி) – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமில் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்கள் தொடர்பாக கூறப்படுகிறது: அன்னார் கஅப் பின் அஷ்ரஃபை கொலை செய்தவர்களைச் சார்ந்தவர்களில் ஒருவர் ஆவார். இந்த தாக்குதலின்போது அன்னாரது கால்களில் காயங்கள் ஏற்பட்டன. மேலும் இரத்தம் பீறிட்டு வெளியேறியது. சஹாபாக்கள் அன்னாரை எடுத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி பாப் கதல் கஅப் பின் அல் அஷ்ரஃப் ஹதீஸ் எண் 4037 & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 334 அல்ஹாரிஸ் பின் அவ்ஸ் (ரலி)– 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

கஅப் பின் அஷ்ரஃப் யார் என்றால், அவன் மதீனாவின் தலைவர்களில் ஒருவர் ஆவான். பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த உடன்படிக்கையில் கலந்து கொண்டவராவான். ஆனால் பிறகு அவன் குழப்பம் விளைவிக்க முயற்சி செய்தான். இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவனை கொலை செய்ய கட்டளையிட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் அவரைக் கொலை செய்தது மற்றும் காயங்கள் ஏற்பட்ட சம்பவம் தொடர்பான குறிப்பு இவ்வாறு காணக்கிடைக்கிறது. அமதத்துல் காரியில் இது தொடர்பாக மேலும் விளக்கமாக உள்ளது.

முஹம்மது பின் முஸ்லிமா அவர்கள் தமது தோழர்களுடன் கஅப் பின் அஷ்ரஃபை தாக்கினார்கள். மேலும் அவனைக் கொன்றார்கள். அப்போது அவர்களுடன் இருந்த ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அவ்ஸ் அவர்கள் மீது வாள் பட்டதனால் காயமடைந்தார்கள். அதாவது தம்முடன் இருந்தவர்களின் வாள் பட்டதனால் காயமடைந்தார்கள். எனவே அவர்களுடைய தோழர்கள் அவர்களை தூக்கிக் கொண்டு விரைவாக மதீனா வந்தடைந்தார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அவ்ஸ் அவர்களுடைய வாயில் தனது உமிழ்நீரை இட்டார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு கஷ்டம் ஏற்படவில்லை.

(உம்தத்துல் காரி தொகுதி 17 பக்கம் 179 கிதாபுல் மகாஸி பாப் கதல் பின் அல்அஷ்ரஃப் – 2001 ஆம் ஆண்டு தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கஅப் பின் அஷ்ரஃப் ஏன் கொலை செய்யப்பட்டான் என்பது தொடர்பான சம்பவத்தை இதற்கு முன்பும் நான் சிறிது எடுத்துக் கூறியுள்ளேன். மேலும் விளக்கமாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள். அதை நான் எடுத்துக் கூறுகின்றேன்.

கஅப் மார்க்க ரீதியில் ஒரு யூதன் ஆவான். ஆனால் அவன் யூத சந்ததிகளைச் சார்ந்தவன் அல்ல. மாறாக, அரபிகளைச் சார்ந்தவன் ஆவான். அவனது தந்தை அஷ்ரஃப் பனூ நப்ஹானின் தந்திரமான மற்றும் புத்திக் கூர்மையுடைய ஒரு நபராவார். அவர் மதீனா வந்து பனூ நஸீருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். மேலும் அவரது நண்பரானார். பிறகு அவர் தனக்கென்று ஓர் இருப்பை உருவாக்கிக் கொண்டு அதிகாரத்தையும் பெற்றார்.

மேலும் பனூ நஸீர் கோத்திரத்தின் தலைவர்களில் மிகப்பெரும் தலைவரான அபூ ராஃபி இப்னு ஹகீக் என்பவர் தனது மகளை அவருக்கு திருமணம் செய்து கொடுத்தார். அந்த பெண்ணின் வயிற்றிலிருந்தே கஅப் பிறந்தான். அவன் பெரியவனாகி தனது தந்தையைவிட மிகப்பெரிய தகுதியை அடைந்தான். எதுவரை என்றால், அரபிகளைச் சார்ந்த அனைத்து யூதர்களும் அவனை தமது தலைவராக கருதினர். கஅப் அழகான மனிதராக இருந்தது மட்டுமின்றி, சிறந்த முறையில் பேசக்கூடியவனும், சிறந்த சொற்பொழிவை நிகழ்த்தக்கூடியவனும் ஆவான். கவிஞனும், செல்வம் படைத்தவனும் ஆவான்.

மேலும் தமது சமுதாய ஆலிம்களுக்கும் மற்ற சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மக்களுக்கும் பொருளாதார உதவிகள் செய்து தமது கையில் வைத்திருந்தான். ஆனால் ஒழுக்க ரீதியில் மிகவும் தீய ஒழுக்கங்களைக் கொண்ட மனிதனாவான். சூழ்ச்சி செய்வதிலும், குழப்பம் விளைவிப்பதிலும் குறிப்பான தகுதியைப் பெற்றிருந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்தபோது கஅப் பின் அஷ்ரஃப் மற்ற சில யூதர்களுடன் இணைந்து அந்த உடன்படிக்கையில் கலந்து கொண்டார்.

மிகப் பெரிய விளக்கத்தை அன்னார் எழுதியுள்ளார்கள். நான் சில இடங்களிலிருந்து சிலவற்றை எடுத்துக் கூறுவேன்.

எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே நட்பு ரீதியிலான மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்காக தற்காப்பு நடவடிக்கையில் ஒன்றுபட்டு எழுதப்பட்ட உடன்படிக்கையில் அவனும் கலந்து கொண்டான். ஆனால் உள்ளுக்குள்ளேயே கஅபின் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி மற்றும் பகைமையின் நெருப்பு கொளுந்து விட்டு எரிந்தது. உடன்படிக்கையில் அவன் கலந்து கொண்டலும் உள்ளத்தில் நயவஞ்சகத்தன்மை இருந்தது. பகைமை இருந்தது. வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும் இருந்தது. இதன் காரணமாக அந்த நெருப்பில் அவன் எரிந்து கொண்டிருந்தான். மேலும் இந்த பகைமை, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவனது மறைமுக செயல்பாடுகள், மறைமுகமான சூழ்ச்சிகளின் மூலமாக இஸ்லாத்திற்கெதிராகவும், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் எதிர்ப்பை வெளிப்படுத்தினான்.

மேலும் எழுதப்பட்டுள்ளது: கஅப் ஒவ்வொரு வருடமும் யூத ஆலிம்களுக்கும், கண்ணியமிக்க பெரியவர்களுக்கும் அதிகமாக தான தருமங்களை செய்து வந்தான். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களது ஹிஜ்ரத்திற்குப் பிறகு இந்த மக்கள் தமது உதவித் தொகையை பெறுவதற்காக அவனிடம் சென்றபோது, அவன் பெருமானார் (ஸல்) அவர்களைக் குறித்து அவர்களிடம், தமது மார்க்க நூல்களின் அடிப்படையில் இந்த நபர் உண்மையாளரா? இல்லையா என்பது தொடர்பாக உங்களது எண்ணம் என்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள், வெளிப்படையாக பார்க்கும்போது நமக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட நபர் இவர்தான் என்று தெரிய வருகின்றது என்று கூறினர்.

இந்த பதிலைக் கேட்டு காழ்ப்புணர்ச்சியும், பகைமையும் கொண்டிருந்த கஅப் மேலும் கொந்தளித்தான். மேலும் அவர்களை மிகவும் ஏசிப் பேசினான். மேலும் அவர்களுக்கு வழங்கி வந்த தர்மங்களையும், உதவித் தொகையையும் அவன் கொடுக்கவில்லை. யூத ஆலிம்கள் வாழ்வாதாரத்திற்கான ஏற்பாடு முற்றிலும் தடை பட்டதனால் அவர்கள் மீண்டும் கஅபிடம் வந்தார்கள். மேலும் கஅபிடம், அடையாளங்களை புரிந்து கொள்வதில் எங்களுக்கு தவறு ஏற்பட்டு விட்டது. நாங்கள் சிந்தித்து பார்த்தோம். உண்மையில் நம்மிடம் வாக்குறுதியளிக்கப்பட்ட அந்த நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கிடையாது என்று கூறினர்.

எவ்வாறிருப்பினும், இந்த பதிலின் மூலம் கஅபின் பிரச்சனையும் தீர்ந்தது. அவன் மகிழ்ச்சியடைந்தவனாக, அவர்களுக்கு தர்மங்களை வழங்கியதால் அவர்களது பிரச்சனையும் முடிவுற்றது. எவ்வாறிருப்பினும் இது ஒரு மார்க்கத்தின் காரணமாக செய்யப்பட்ட எதிர்ப்பாகும்.

ஹஸ்ரத் மியான் பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சரியாக எழுதியுள்ளார்கள்: எந்நிலையிலும் இது மார்க்க ரீதியான எதிர்ப்புதான். மார்க்க ரீதியான எதிர்ப்பு என்பது பெரும் நடவடிக்கை எடுக்கும் வகையிலுள்ள ஆட்சேபனைக்குரிய விஷயமல்ல. அல்லது அதன் காரணமாக கஅபின் மீது குற்றம் சுமத்தக்கூடிய விஷயமும் அல்ல. கஅபிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதன் உண்மையான காரணம் என்னவென்றால், கஅபின் எதிர்ப்பில் அபாயகரமான நிலை ஏற்பட்டிருந்தது. மேலும் பத்ர் போருக்குப் பிறகு அவன் மேற்கொண்ட வழிமுறைகள் கடுமையான குழப்பத்திற்கு அடித்தளமிடக்கூடியதாக இருந்தது. மேலும் முஸ்லிம்களுக்கு மிகவும் அபாயகரமான நிலைமைகள் உருவாகி விட்டன.

முஸ்லிம்களின் ஈமானின் நிலையானது ஒரு தற்காலிக விஷயம் என்றும், அவர்கள் ஓர் ஆர்வத்தில் இவ்வாறு செய்கின்றனர் என்றும் பின்னாட்களில் அது முடிவுற்று விடும் என்றும் மீண்டும் திரும்பி தமது மதத்திற்கே வந்து விடுவார்கள் என்றும் கஅப் கருதி வந்தான். ஆனால் பத்ர் போரில் வியக்கத்தக்க வெற்றி கிடைத்தது. மற்றும் குரைஷிகளின் பெரும்பான்மையான தலைவர்கள் கொல்லப்பட்டனர். இதனால் அவனுக்கு கவலை ஏற்பட்டது. பிறகு அவன் இஸ்லாத்தை அழிப்பதற்காகவும், ஒழித்துக் கட்டுவதற்காகவும் தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தினான்.

அவனது உள்ளத்திலுள்ள காழ்ப்புணர்ச்சி மற்றும் பொறாமையின் வெளிப்பாடு முதல் முறையாக, பத்ர் சந்தர்ப்பத்தின்போதே மக்கள் அவனிடம் மக்கத்து நிராகரிப்பவர்களுக்கு எதிராக நமக்கு வெற்றி கிடைத்துள்ளது என்று கூறியபோது நிகழ்ந்தது. அதற்கு அவன், இவ்வனைத்தும் பொய்யாகும். மேலும் தவறான செய்தியாகும் என்று கூறினான். ஆனால், இந்த செய்தி உண்மை என நிரூபணமானது. இந்த செய்தி உண்மையானது என்று நிரூபணமாகிய பிறகு அவனது கோபம் மேலும் அதிகரித்தது. மேலும் முன்பைவிட அதிகமாக அவன் பொங்கி எழுந்தான். முஸ்லிம்கள் பத்ர் போரிலிருந்து திரும்பி வந்த பிறகு அவன் மக்காவை நோக்கி பயணம் செய்தான்.

அங்கு சென்று மக்காவாசிகளிடம், தனது பேச்சுத் தந்திரம் மற்றும் சொற்பொழிவு மற்றும் கவிதையின் மூலமாக முஸ்லிம்களுக்கு எதிராக குரைஷிகளின் உள்ளத்திலிருந்து நெருப்பை மேலும் அதிகரிக்கச் செய்தான். மேலும் மேலும் அதிகரிக்கச் செய்ய முயற்சி செய்தான். அவர்களது உள்ளத்தில் முஸ்லிம்களின் இரத்தத்தை குடிப்பதற்கான அணையாத தீபத்தை இயற்றினான். அவர்களது உள்ளங்களை உணர்வு ரீதியிலும், பழிவாங்க வேண்டும் என்பதிலும் கடுமையாக நிறைத்து விட்டான். கஅபின் கூற்றினால் அவர்களது உணர்வுகளில் ஒரு வியக்கத்தக்க வேகம் உருவானது.

அப்போது அவர்கள் கானா காபாவின் முற்றத்திற்கு சென்று கஃபாவின் திரைச்சீலையை அவனது கையில் கொடுத்தனர். மேலும் இஸ்லாத்தையும், இஸ்லாத்தின் தோற்றுனர் பெருமானார் (ஸல்) அவர்களையும் அழித்து விடாத வரை நிம்மதியாக இருக்க மாட்டோம் என்று அதில் சத்தியம் செய்தனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: அவர்களது இந்த கூற்றின் விளைவாக மக்காவில் நெருப்பை மூட்டிய நிலை ஏற்பட்டது. பிறகு இரண்டாவது கோத்திரத்தின் பக்கம் முகம் திருப்பினான். ஒவ்வொரு கோத்திரத்திரத்தினரையும் முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டினான். மேலும் தமது கவிதைகளின் மூலமாக மிகவும் தீய மற்றும் அருவருக்கத்தக்க கூற்றின் மூலமாக முஸ்லிம் பெண்களைப் பற்றி எடுத்தக் கூறினான். எதுவரை என்றால், நபித்துவ குடும்பத்தின்

பெண்களையும் பழித்துரைத்தான். மேலும் தமது கவிதைகளின் மூலம் அவன் கூறியவற்றை விவாதப் பொருளாக்கி விட்டான். இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு கூட அவன் சூழ்ச்சிகளை செய்தான். அன்னாரை விருந்திற்கு அழைப்பது போன்று சாக்கு போக்குகளைக் கூறி தமது வீட்டிற்கு அழைத்து சில யூத இளைஞர்கள் மூலம் அன்னாரை கொலை செய்ய திட்டமிட்டான். ஆனால் அல்லாஹ்வின் அருளால் குறித்த நேரத்தில் இது பற்றி தகவல் கிடைத்தது. மேலும் இந்த சூழ்ச்சி வெற்றியடையவில்லை.

இந்த அளவுக்கு நிலைமைகள் சென்ற பிறகு, கஅபிற்கு எதிராக உடன்படிக்கையை முறித்தல், கிளர்ச்சி செய்தல், போருக்காக தூண்டுதல், குழப்பம் விளைவித்தல், தகாத வார்த்தைகளில் பேசுதல், அன்னாரை கொலை செய்ய சூழ்ச்சி செய்தல் போன்ற குற்றச்சாட்டுகள் அதன் எல்லையை அடைந்தபோது அன்னார் மதீனாவிற்கு வந்த பிறகு மக்களிடம் செய்த மற்றும் சமுதாயங்களுக்கிடையே செய்யப்பட்ட உடன்படிக்கைக்கேற்ப, அன்னார் கஅப் பின் அஷ்ரஃபின் நடவடிக்கைகளின் காரணமாக அவன் கொல்லப்படுவதற்கு தகுதியானவன் என்று தீர்ப்பளித்தார்கள்.

மேலும் தமது சஹாபாக்களிடம், அவனைக் கொன்று விடுமாறு கூறினார்கள். மேலும் இந்த நேரத்தில் கஅபின் குழப்பத்தினால், மதீனாவில் அவனுக்கு எதிராக வெளிப்படையாக அவனைக் கொல்வதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு அவன் கொல்லப்பட்டிருந்தால் மதீனாவில் போர் துவங்குவதற்கான அபாயம் இருந்தது. பிறகு இதனால் எந்த அளவுக்கு இரத்தம் சிந்தப்பட்டிருக்கும் என்பது தெரியாது.

எனவேதான் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த போரையும், குழப்பம் மற்றும் இரத்தம் சிந்துதலை தடுப்பதற்காக அவனை இரகசியமான முறையில் கொல்லுமாறு தீர்ப்பு வழங்கினார்கள். இதற்காக அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் கலப்பற்ற சஹாபியான முஹம்மது பின் முஸ்லிமா அவர்களிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்திருந்தார்கள். மேலும அவர்களிடம், நீங்கள் எந்த வழிமுறையை பின்பற்றினாலும் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் சஅது பின் மஆஸ் அவர்களின் ஆலோசனையுடன் அதை நடைமுறைப்படுத்துங்கள் என்றும் கூறியிருந்தார்கள்.

அதற்கு முஹம்மது பின் முஸ்லிமா அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவனை இரகசியமாக கொல்ல வேண்டுமென்றால் ஏதாவது சாக்குப் போக்கை தயார் செய்ய வேண்டும். அதன் மூலம் கஅபை அவனது வீட்டிலிருந்து வெளியே கொண்டு வந்துதான் கொலை செய்ய முடியும் என்று கூறினார்கள்.

இதைக் கேட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் மவுனமாக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சரி. நீங்கள் எந்த வழிமுறையை மேற்கொள்ள வேண்டியது வந்தாலும் மேற்கொள்ளுங்கள். பிறகு முஹம்மது பின் முஸ்லிமா அவர்கள் சஅது பின் மஆஸ் அவர்களிடம் ஆலோசனை செய்து அபூநாயிலா மற்றும் இரண்டு மூன்று சஹாபாக்களை தன்னுடன் வைத்துக் கொண்டார்கள். மேலும் கஅபின் வீட்டிற்குச் சென்றார்கள்.

மேலும் கஅபிடம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் சதகா கேட்கின்றார்கள்? இன்றைய நாட்களில் நாங்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றோம். உங்களால் எங்களுக்கு கடன் கொடுக்க முடியுமா? என்று கேட்டார்கள். இதைக் கேட்டு கஅப் மிகுந்த மகிழ்ச்சியடைந்தவாறு, நீங்கள் அந்த நபரை விட்டு விலகி வருவதற்குரிய அந்த நாள் தொலைவில் இல்லை என்றும் நீங்கள் அவரை விட்டு விடுவீர்கள் என்றும் கூறினான். அதற்கு முஹம்மது அவர்கள், நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்த இயக்கத்தின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதை இப்போது நாங்கள் பார்த்து வருகின்றோம். ஆனால் நீங்கள் கடன் கொடுப்பீர்களா? இல்லையா? என்று கேட்டார்கள்.

அதற்கு கஅப், நான் கொடுக்கின்றேன். ஆனால் சில பொருட்களை அடமானம் வையுங்கள் என்று கூறினான். அதற்கு அவர்கள் என்ன பொருள் என்று கேட்டார்கள். அதற்கு அந்த அயோக்கியன், முதலாவதாக உங்களது பெண்களை என்னிடம் அடமானம் வையுங்கள் என்று கூறினான். உன்னைப் போன்ற மனிதனிடத்தில் எங்களது பெண்களை வைப்பதா என்று எண்ணி அவர்களுக்கு கோபம் அதிகமாக வந்தது. அதற்கு கஅப், உங்களது மகனை கொடுங்கள் என்று கூறினான். அதற்கு அவர்கள், இதுவும் சாத்தியமற்றது. நாங்கள் முழு அரபு நாட்டின் பழிசுமத்துதலையும் எங்கள் தலைமீது வைக்க முடியாது என்று கூறினார்கள். நீங்கள் கருணை காட்டினால் நாங்கள் எங்களிடத்தில் இருக்கின்ற ஆயுதங்களை உன்னிடத்தில் அடமானம் வைக்கின்றோம் என்று கூறினர். கஅப் இதனைக் ஏற்றுக் கொண்டான்.

முஹம்மது பின் முஸ்லிமா மற்றும் அவர்களுடைய தோழர்கள் இரவில் வருவதாக வாக்குறுதி கொடுத்து திரும்பிச் சென்றனர். இரவில் இவர்கள் வெளிப்படையாகவே தமது ஆயுதங்களை கொண்டு வந்தனர். கஅபை வீட்டிற்கு வெளியே அழைத்து வந்தார்கள். பிறகு அவனை சுற்றி வளைத்து அவனைக் கொன்று விட்டார்கள்.

அப்போது ஸைது அவர்களுக்கு காயம் ஏற்பட்டது. அவர்கள் மீது தம்முடன் இருந்தவர்களின் வாள் பட்டு விட்டது. கஅபை கொலை செய்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் இந்த கொலை பற்றி கூறப்பட்டது.

காலையில் அவனது கொலை பற்றிய செய்தி பரவியது. நகரத்தில் மிகப்பெரிய கூச்சல் ஏற்பட்டது. அனைத்து யூதர்களும் பொங்கி எழுந்தனர். அடுத்த நாள் காலை யூதர்களின் ஒரு குழு பெருமானார் (ஸல்) அவர்களை சந்திக்க வந்தனர். மேலும் அன்னாரிடம், எங்களது தலைவர் கஅப் பின் அஷ்ரஃபை கொலை செய்யப்பட்டு விட்டார் என்று ஆட்சேபித்தனர். இதைக் கேட்டு பெருமானார் (ஸல்) அவர்கள், இதனை மறுக்கவில்லை. மற்றும் எனக்குத் தெரியாது என்றும் கூறவில்லை.

மாறாக, அன்னார் அவர்களிடம் கூறினார்கள்: கஅப் எந்த எந்த குற்றத்திற்கு ஆளாகி இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? பிறகு அன்னார் ஒவ்வொன்றாக கஅபின் உடன்படிக்கை மீறுதல், போருக்கான திட்டத்தை தீட்டுதல், குழப்பத்தை ஏற்படுத்துதல், தகாத வார்த்தைகளில் பேசுதல், கொலை செய்வதற்கு சூழ்ச்சி செய்தல் போன்ற அவன் செய்த நடவடிக்கைகளை நினைவூட்டினார்கள். இதனைக் கேட்ட அம்மக்கள் அஞ்சியவாறு அமைதியாக இருந்தனர். அப்போது அவர்களது ஆர்வம் குளிர்ந்து போனது. மேலும் அவர்களுக்கு, உண்மையான விஷயம் இதுதான் என்றும், இதற்கான தண்டனை இதுவேயாகும் என்பதும் தெரிய வந்தது.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இதிலிருந்து நீங்களாவது வருங்காலங்களில் அமைதி மற்றும் ஒத்துழைப்பு நல்குவது மற்றும் பகைமை மற்றும் குழப்பத்திற்கான விதையை விதைக்காமல் இருப்பது ஆகியவற்றிற்கான உடன்படிக்கை செய்யுங்கள்.

எனவே யூதர்களின் விருப்பத்துடன் வருங்காலத்திற்காக ஒரு புதிய உடன்படிக்கை எழுதப்பட்டது. மேலும் யூதர்கள் முஸ்லிம்களுடன் அமைதியுடன் இருப்பதற்கும், குழப்பம் விளைவிப்பத்திலிருந்து தவிர்ந்திருப்பதற்கும் மீண்டும் வாக்குறுதி வழங்கினர். மேலும் இந்த உடன்படிக்கை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கஅப் பின் அஷ்ரஃபின் கொலைக்கான பழியை முஸ்லிம்கள் மீது யூதர்கள் பின்னாட்களில் சுமத்தியதாக வரலாற்றில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஏனென்றால் அவர்களது உள்ளமும் கஅப் தமது செயலின் காரணமாக அந்த தண்டனைக்கு ஆளானார் என்பதை உணர்ந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆகுமானதற்ற முறையில் ஒரு கொலையை செய்துள்ளார்கள். இது தவறாகும் என்று மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் பின்னாட்களில் செய்கின்றனர்.

ஆனால் அன்னார் எழுதுகின்றார்கள்: இது ஆகுமானதற்ற கொலை அல்ல. ஏனென்றால் கஅப் பின் அஷ்ரஃப் பெருமானார் (ஸல்) அவர்களுடன் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக முறையாக ஒரு உடன்படிக்கை செய்திருந்தார். முஸ்லிம்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது ஒருபுறமிருக்கட்டும். மாறாக, கஅப், வெளியிலுள்ள ஒவ்வொரு எதிரிக்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு உதவி செய்வதாகவும், முஸ்லிம்களுடன் நட்பு ரீதியிலான தொடர்பை மேற்கொள்வேன் என்றும் உடன்படிக்கை செய்துள்ளார். கஅப் இந்த உடன்படிக்கையின் வாயிலாக, மதீனாவில் ஜனநாயக முறையிலான ஆட்சி நிறுவப்பட்டிருந்தது. ஆட்சித்

தலைவராக பெருமானார் (ஸல்) அவர்கள் தலைவராக இருப்பார்கள் என்றும், எல்லா விவகாரங்களிலும் அன்னாரது முடிவே ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதையும் அவர் உடன்படிக்கை மூலமாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: வரலாற்றிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இந்த உடன்படிக்கைக்கேற்பவே யூதர்கள் தங்களது வழக்குகளை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். மேலும் அன்னார் அவர்களுக்கு கட்டளையும் பிறப்பித்து வந்தார்கள்.

இப்போது இந்த நிலைமைகள் இருந்தும்கூட கஅப் எல்லா உடன்படிக்கையையும் தூக்கி எறிந்து விட்டார். கைவிட்டு விட்டார். மாறாக, முஸ்லிம்களை ஏமாற்றினார் என்பது ம ட்டும் இங்கு விஷயமல்ல. மாறாக, அரசாங்கத்தை அவர் ஏமாற்றினார் என்பதும் கவனிக்கத்தக்க விஷயமாகும். ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த அரசாங்கத்திற்கு தலைவராக இருந்தார்கள்.

மதீனாவில் குழப்பத்திற்கான விதையை விதைத்தார். நாட்டில் போருக்கான நெருப்பை மூட்டுவதற்கு முயற்சி செய்தார். மேலும் முஸ்லிம்களுக்கு எதிராக அரபு கோத்திரங்களை அபாயகரமான முறையில் தூண்டினார். மேலும் முஸ்லிம் பெண்களைக் குறித்து தமது கவிதைகளினால் பழித்துரைத்தது, பிறகு பெருமானார் (ஸல்) அவர்களையே கொலை செய்வதற்கு திட்டம் தீட்டியது இந்த அனைத்து சம்பவங்களும் எத்தகைய சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது என்றால் அப்போது முஸ்லிம்கள் நாலா புறமிருந்தும் கஷ்டத்தில் பீடிக்கப்பட்டிருந்தனர். முஸ்லிம்களுக்கு கடுமையான கஷ்டத்திற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டது.

இத்தகைய நிலைமையில் கஅப் செய்த குற்றமானது இன்னும் சொல்வதென்றால் பல குற்றங்களை இழைத்த அவன் மீது தண்டனைக்கான நடடிக்கை எடுக்காமல் எவ்வாறு இருக்க முடியும்? அதன் காரணமாகவே அவர் மீது தண்டனைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்கள்: இன்றைய நாட்களில் நாகரிகத்தை பரப்புகின்றோம் என்று பறைசாற்றுகின்ற நாடுகளில் கூட குழப்பம், உடன்படிக்கையை முறித்தல், போருக்கான நெருப்பை மூட்டுவது, கொலைக்கான சூழ்ச்சி செய்வது போன்ற குற்றங்களுக்காக குற்றவாளிகளுக்கு கொலை செய்வதற்கான தண்டனை வழங்கப்படுகிறது. பிறகு எதற்காக இந்த குற்றச்சாட்டு?

இரண்டாவது கேள்வி என்னவென்றால், கொலை செய்த விதம் தொடர்பானதாகும். கொலை ஏன் இரகசியமாக இரவில் செய்யப்பட்டது என்பதாகும். இது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ள வேண்டும். அதாவது அரபு நாட்டில் அன்று முறையாக எந்த அரசாங்கமும் இருக்கவில்லை. ஒரு தலைவரை நிர்ணயித்திருந்தார்கள். ஆனால் அவரே முடிவு கூறுவார். ஆனால் ஒவ்வொரு கோத்திரத்தைச் சார்ந்தவரும் சுதந்திரமானவராக இருந்தார். அவர் தமக்காக ஏதாவது முடிவை பெற வேண்டுமென்றால் பெற்றுக் கொள்ளலாம். ஒட்டுமொத்த ரீதியில் தீர்ப்பை பெற்றுக் கொள்ள பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அவர்கள் வந்தார்கள். தத்தமது வட்டத்தில் கோத்திரத்திற்கிடையில் செய்ய வேண்டுமென்றாலும் அது நடந்து வந்தது.

இவ்வாறிருக்கும்போது கஅத் தொடர்பான வழக்கை பதிவு செய்து அவரைக் கொல்வதற்கான தீர்ப்பை கொடுக்க முடியுமா? அல்லது பெற முடியுமா? யூதர்களிடம் முறையிட்டால், அவர்தான் அவர்களின் தலைவராக இருந்தார். யூதர்கள் முஸ்லிம்களை ஏமாற்றி இருந்தனர். ஒவ்வொரு நாளும் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தார்கள்.

எனவே யூதர்களிடம் சென்றிருக்க வேண்டும் என்றே கேள்வியே தவறாகும். சுலைம் மற்றும் உத்ஃபான் கோத்திரத்தினரிடம் நீதியை பெறலாம் என்றால் அவர்களுடனும் இரகசிய உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது அதன் காரணமாக சில மாதங்களுக்குள் மூன்று அல்லது நான்கு முறை இரவு நேரத்தில் மதீனாவின் மீது தாக்குதல் நடத்த அவர்கள் ஆயத்தம் செய்திருந்தனர். அவர்களும் இவர்களது கோத்திரத்தைச் சார்ந்தவர்கள்தான். இப்படிப்பட்ட நிலையில் இவர்களிடமும் நீதி கிடைத்திருக்காது.

மேலும் அன்னார் எழுதுகின்றார்கள்: அந்த நேரத்தின் நிலைமையை சற்று சிந்தித்து பாருங்கள். முஸ்லிம்களுக்கு இதைத்தவிர வேற என்ன வழிதான் திறந்திருந்து என்பதை சிந்தித்துப் பாருங்கள். அதாவது ஒரு நபருடைய தூண்டுதலும், போர் செய்ய மக்களை அழைப்பதும், குழப்பத்தை பரப்புவதும் மற்றும் கொலை செய்வதற்கான சூழ்ச்சி செய்வது ஆகியவற்றின் காரணமாக அவர் உயிரோடு இருப்பதை தங்களுக்கும், தங்களது நாட்டின் அமைதிக்கும் அபாயமாக இருப்பதைக் கண்டு சுயமே தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து அவனை கொலை செய்வதில் என்ன தவறு இருக்கிறது என்றும் சிந்தியுங்கள்.

ஏனென்றால் அமைதியாக இருக்கின்ற பல குடிமக்களின் உயிர் அபாயத்தில் இருக்கும் நிலையில் மேலும் நாட்டினுடைய அமைதி சீர்குலைக்கப்படுவதை விடவும் மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய, குழப்பம் விளைவிக்கக்கூடிய இந்த நபர் கொலை செய்யப்படுவதே மிகவும் சிறந்ததாகும். அல்லாஹ்வும் குழப்பம் கொலையை விட கொடியதாகும் என்று கூறுகிறான்.

எவ்வாறிருப்பினும் ஹிஜ்ரத்திற்குப் பிறகு முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு சாதாரண நகர்ப்புறத்தைச் சார்ந்தவர் என்ற அந்தஸ்தை மட்டும் பெற்றிருக்கவில்லை. மாறாக அவர்கள் மதீனாவில் ஜனநாயக ரீதியிலான ஆட்சிக்கு பெருமானார் (ஸல்) தலைவராவார்கள். மேலும் அன்னாருக்கு வழக்குகளிலும், அரசியல் விவகாரங்களிலும் எந்த முடிவை சரியானதாக கருதுகின்றார்களோ அதை வழங்குவதற்கான அதிகாரம் அன்னாருக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

எனவே அன்னார் நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கஅப் குழப்பம் செய்ததினால் அவனை கொலை செய்யப்படுவதற்கு தகுதியானவனாக கூறினார்கள். இதுவொன்றும் மிகப்பெரிய குற்றத்திற்குரிய விஷயமல்ல. எனவே 1300 வருடத்திற்கு பிறகு இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றவர்களின் இந்த ஆட்சேபனை பொருளற்றதாகும். ஏனென்றால் அந்த நேரத்தில் யூதர்கள் அன்னாரது பேச்சைக் கேட்டு எந்த குற்றச்சாட்டும் செய்யவில்லை. ஒரு நீண்டகாலமாக ஒருபோதும் குற்றம்சாட்டவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 467–473)

ஆகவே இதுதான் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அவ்ஸ் (ரலி) அவர்களின் நிலையாகும். கொலை செய்வதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அனுப்பிய குழுவில் அன்னாரும் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும், இஸ்லாம் தீவிரவாதத்தை விரும்புகின்ற மார்க்கம் என்றும் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறாகும். அவர் தண்டனை பெறுவதற்கு தகுதி படைத்தவராக இருந்தார். பெருமானார் (ஸல்) அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் அவனுக்கு தண்டனை வழங்கினார்கள். இன்று இவர்களது சம்பவத்தோடு நான் நினைவு செய்கின்றேன்.

அல்லாஹ் எப்போதும் இஸ்லாத்தை இந்த குழப்பத்திலிருந்து காப்பாற்றுவானாக. இன்றைய நாட்களில் இந்த நிலைதான் இருக்கின்றது. முஸ்லிம்கள் இந்த வரலாற்று சம்பவங்களிலிருந்து படிப்பினை பெறுவதற்கு பகரமாக குழப்பத்தில் மூழ்கி உள்ளனர். மேலும் இவர்களே குழப்பத்திற்கு காரணியாக அமைகின்றனர். அரசாங்கத்திற்குள்ளும் மேலும் அரசாங்கங்களும் இந்த குழப்பத்திற்கு காரணமாக உள்ளனர். அல்லாஹ் இஸ்லாத்தை இந்த குழப்பத்திலிருந்து பாதுகாப்பானாக. அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட காலத்தின் வழிகாட்டியும், இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக வந்துள்ளவரையும் ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 17 January 2019 Issue No. 3

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மேலும் அவர்களில் சிலர் பெண்களின் உடைகளை அணிந்து கொள்கிறார்கள். கரங்களில் மருதாணியை பூசிக் கொள்கிறார்கள். வளையல்களை அணிந்து கொள்கிறார்கள். தங்களது கூட்டங்களில் திருக்குர்ஆனை விட கவிதைகளைப் படிப்பதையே பெரிதும் விரும்புகிறார்கள். எனவே இது அகன்று விடும் என்று எண்ண முடியாத அளவிற்கு பழமையான கறையாகும். இருப்பினும் இறைவன் தனது வல்லமைகளை வெளிப்படுத்துவான். மேலும் இஸ்லாத்திற்குப் பாதுகாவலனாகவும் இருப்பான்.

**பெண்களுக்கு சில அறிவுரைகள்**

இக்காலத்தில் நமது பெண்கள் பித்அத் என்னும் நவீன பழக்க வழக்கங்களில் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்கள், பலதார மணத்தைப் பற்றிய விஷயத்தை மிகத் தீய கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள். அதனைப் பற்றி அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்றே கூற வேண்டும். இறைச் சட்டம் தன்னுள் எல்லா விதமான சிகிச்சை முறைகளையும் கொண்டுள்ளது என்பதனை அவர்கள் அறியவில்லை. இஸ்லாத்தில் பலதார மணத்தைப் பற்றிய விஷயம் இடம் பெறாமல் இருந்தால் ஆண்களுக்கு இரண்டாம் திருமணம் செய்ய வேண்டிய நிலை உண்டாகும்போது இஸ்லாம் மார்க்கச் சட்டத்தில் அதற்கு எந்த வழியுமில்லை என்று ஆகிவிடும்.

உதாரணமாக, ஒரு பெண், புத்தி சுவாதீனம் இல்லாதவளாக அல்லது தொழுநோயாளியாகவோ இருந்தால் அல்லது ஒன்றுமே செய்ய முடியாத நிரந்தரமான நோயால் பீடிக்கப்பட்டவளாக இருந்தால் அப்பெண் இரக்கம் காட்டப்பட வேண்டியவளாக இருக்கின்றாள். ஆனால் அவள் பயனற்றவளாகவும் இருக்கின்றாள். கணவனும் தனிமையாக இருக்கும் நிலையில் பொறுமை செய்ய முடியாதவனாக இருந்தால் அவனும் கருணைக்குத் தகுதியுள்ளவனாவான். இந்நிலையில் அக்கணவனுக்கு மறுமணம் செய்வதற்கு அனுமதி வழங்காமலிருப்பது அவனது ஆண் தன்மைக்கு செய்யும் அநியாயம் ஆகும். உண்மையில் இறை சட்டமானது இவ்விஷயங்களை முன் வைத்து ஆண்களுக்கு இவ்வழியைத் திறந்து வைத்திருக்கிறது. மேலும் தவிர்க்க முடியாத சமயத்தில் பெண்களுக்கும் உரிய பாதையைத் திறந்து வைத்திருக்கிறது. கணவனும், மனைவிக்கு உதவாமல் போனால் அவள் நீதிபதி மூலமாக தலாக்குக்கு நிகராக இருக்கும் குலா (மண விலக்கு) பெறலாம்.

இறைசட்டம் ஒரு மருந்து கடைக்கு ஒப்பானதாக இருக்கிறது. அக்கடையில் எல்லா நோய்களுக்கும் தேவையான மருந்து கிடைக்காவிட்டால் அக்கடையானது சரியாக நடைபெற முடியாது. எனவே ஆண்களுக்கு இரண்டாவது திருமணம் செய்ய கட்டாயப்படுத்தக் கூடிய சில பிரச்சனைகள் உண்டாகி விடுகின்றன என்பது உண்மை இல்லையா? என்பதைச் சந்தித்துப் பாருங்கள். எந்த மார்க்கச் சட்டத்தில் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தக்க பரிகாரம் காணப்படமாட்டாதோ அந்த மார்க்கச் சட்டத்தால் என்ன பயன்?

கவனியுங்கள்! விபச்சாரம் மாத்திரமே பைபிளின் புதிய ஏற்பாட்டில் விவகாரத்து செய்யும் விஷயத்தில் உரிய நிபந்தனையாக இருக்கிறது. மேலும் கணவனையும் மனைவியையும் உயிர் விரோதிகளாக ஆக்கிவிடுகின்ற ஏனைய நூற்றுக்கணக்கான காரணங்கள் இருக்கின்றன. அவை பற்றி அதில் எதுவும் கூறப்படவில்லை. இதனால் கிறிஸ்தவ சமுதாயம் இக்குறையை சகிக்க முடியாததால் இறுதியில் அமெரிக்காவில் விவாகரத்திற்குரிய ஒரு சட்டத்தை நிறைவேற்ற நேர்ந்தது. இச்சட்டத்தால் பைபிளின் புதிய ஏற்பாடு எங்கு போனது என்பது பற்றி இப்போது சிந்தியுங்கள்.

பெண்களே! நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களுக்கு அருளப்பட்ட வேதம் புதிய ஏற்பாட்டைப் போன்று மனிதனின் தலையீடு அதற்கு அவசியமானதல்ல. இந்த வேதத்தில் ஆண்களது உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருப்பது போலவே பெண்களது உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. கணவன் பலதார மணம் செய்வதில் மனைவிக்கு வெறுப்பு உண்டாகுமேயானால் அவள் நீதிபதி மூலமாக ‘குலா’ என்னும் மணவிலக்குப் பெற முடியும். முஸ்லிம்களிடையே உண்டாகவிருக்கும் பலவிதமான நிலைகளை முன் வைத்து இஸ்லாம் மார்க்கச் சட்டங்கள் குறைபாடுள்ளவையாக ஆகாமாலிருக்கும் பொருட்டுத் தனது சட்டத்தில் அவற்றை குறிப்பிட்டிருக்க வேண்டியது இறைவனுக்கு மிகவும் அவசியமானதாக இருந்தது.

ஆகவே பெண்களே! உங்களது கணவன்மார்கள் மறுமணம் செய்ய விரும்பும்போது நீங்கள் இறைவனை குறை கூறாதீர்கள். மேலும் இறைவன் உங்களைச் துன்பங்களிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் காப்பாற்றும் பொருட்டு அவனிடம் பிரார்த்தனை செய்து வாருங்கள். எந்த ஒரு மனிதன் இரு மனைவிமார்களை திருமணம் செய்த பின் அவர்களோடு நடுநிலையோடு நடந்து கொள்ள மாட்டானோ அவன் சந்தேகமின்றி பெரும் அநியாயக்காரனாகவும் இறைவனுக்கு பதில் கூற வேண்டியவனாகவுமிருக்கின்றான்.

ஆயினும் நீங்களே இறைவனுக்குக் கீழ்ப்படியாதவர்களாக இருந்து அவனது கோபத்திற்கு ஆளாகக் கூடியவர்களாக ஆகாதிருப்பீர்களாக. ஒவ்வொருவரும் அவர்களது செயல்களைப் பற்றி கேட்கப்படுவார்கள். நீங்கள் இறைவனது பார்வையில நல்லவர்களாக மாறினால் உங்களின் கணவனும் நல்லவனாக ஆக்கப்படுவான். இஸ்லாம் மார்க்கச் சட்டமானது பல்வேறு நலன்களை முன் வைத்து பலதார மணத்தை ஆகுமானதாகத் தீர்மானித்த போதிலும். கழா–வ–கத்ர் என்னும் விதியின் சட்டங்கள் உங்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் மார்க்கச் சட்டங்களை உங்களால் சகிக்க முடியாதென்றால் துஆ மூலமாக கலா–வ–கத்ர் என்னும் விதியின் சட்டங்களைக் கொண்டு பயன் பெற முயற்சி செய்யுங்கள்.

ஏனெனில் கழா–வ–கத்ர் என்னும் இறைவன் வகுத்த விதியின் சட்டங்கள் இஸ்லாம் மார்க்கச் சட்டங்களையும் வெல்லக் கூடியவையாயிருக்கின்றன. நீங்கள் தக்வா என்னும் இறையச்சத்துடன் செயல்படுங்கள். உலகத்தோடும் அதன் அலங்காரத்தோடும் கவர்ச்சி அடைந்து விடாதீர்கள். உயர் குலத்தின் பெயரால் பெருமைப்படாதீர்கள். எப்பெண்ணையும் ஏளனம் செய்யவோ நகைக்கவோ செய்யாதீர்கள். கணவன்மார்களின் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்காக அவர்களை வற்புறுத்தாதீர்கள். நீங்கள் நிரபராதிகளாகவும் பரிசுத்தவான்களாகவும் மண்ணறைகளில் நுழைவதற்கு முயற்சி செய்யுங்கள்.

இறைவனுக்குரிய கடமையான தொழுகை, ஸக்காத்து முதலானவற்றை செயலாற்றுவதில் எவ்வித சோம்பலையும் மேற்கொள்ளாதீர்கள். உங்களின் கணவன்மார்களுக்கு மனதாலும், உயிராலும் கட்டுப்பட்டவர்களாயிருங்கள். அவர்களது கவுரவத்திற்குரிய பெரும்பாலான பாகம் உங்களின் கரங்களிலேயே இருக்கின்றது.

நீங்கள் இறைவனிடத்தில் நல்ல பெண்மணிகளாகவும், பணிவுள்ளவர்களாகவும் கருதப்படுவதற்காக நீங்கள் உங்களது பொறுப்புகளை நல்ல விதமாக நிறைவேற்றுங்கள். வீணாகச் செலவு செய்யாதீர்கள். கணவன்மார்களின் சொத்துக்களை வீணாக விரயம் செய்யாதீர்கள். மோசம் செய்யாதீர்கள். திருடாதீர்கள். குறை கூறிக் கொண்டிருக்காதீர்கள். ஒரு பெண் இன்னொரு பெண் மீது அல்லது ஆண் மீது வீண்பழி சுமத்தாதீர்கள்.

**(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 79–81)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad